REGISTERED AS A NEWSPAPER பக்கங்கள் 06

விலைரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

### 10 சதவீதமான மாணவர் கல்வியை இடைநிலையுடன் நிறுத்துகின்றனர்

இலங்கையில் பத்து வீதத்திற்கும் அதிகமான சிறுவர்கள் தங்கள் கற்றலை இடை நிலைக்கல்வியோடு நிறுத்தி விடுவதாக கல்வி, உயர்கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்று தெரிவித்துள்ளது. இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டும், போதிய வருமானமில்லாத குடும்பங்களில் சிறுவர்களும் வேலை தேடிச் செல்லும் நிலை தொடர்வதால் இவ்வாறு இடைநிலைக் கல்வியோடு கற்றலை நிறுத்திக் கொள்ளும் சந்தர்ப்பம் அதிகரித்து வருவதாக அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஐப்பசி 21 | 07-11-94 | திங்கட்கிழமை | ஓசை 262

# நேற்று நள்ளிரவுடன் பிரசாரங்கள் முடிவு; வன்முறையை தடுக்க பாதுகாப்பு தீவிரம்

## இரவு, பகலாக எறிகணைவீச்சு; வடமராட்சி கிழக்கில் இடம்பெயர்வு

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து குடியிருப்பு பகுதிகள் மீது ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இரவு பகலாக இத் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

மண்டலாய், ஊரியான் குடியிருப்புகள் மீது இத் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன இப் பகுதிகளில் இருந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்றுவிட்டதினால் உயிர் ஆபத்துக்கள் தவிர்க்கப்பட்டன

இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து உடுத்துறை பகுதிக்கு அப்பால் உள்ள மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். கடலில் கடற்படையினரின் ரோந்து சேவைகளும் காணப்படுகின்றன. (யோ)

## அரசு - புலிகள் சமாதானப்பேச்சு சர்வதேச கொள்கைக்கு முரண்

### சிறிமா திசாநாயகக்கா குற்றச்சாட்டு

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுகள் நடத்தும் அரசு இது தொடர்பான அடிப்படை சர்வதேச கொள்கைகள் பின்பற்றப்படவில்லைஎன ஐ.தே-க ஜனாதிபதி வேட்பாளர் சிறிமா திசாநாயக்கா குற்றஞ்சாட்டியுள்ளார்-

நேற்று முன்தினம் வானொலியில் அவர் உரையாற்றுகையில் உறுதியான அரசையும் பலமான நாட்டையும் உருவாக்குவதே எனது நோக்கம்- ஒழுங்கு கட்டுப்பாடு மிக்க தலைமைத்துவத்திலேயே எதிர் காலம் தங்கியுள்ளது- 21 ஆம் நூற்றாண்டுக்கு பொருத்தமான நாட்டை கட்டியெழுப்புதல் என்ற தமது மறைந்த கணவனின் அபிலாசைகளுக்கு உருவம் கொடுக்க நான் உறுதி பூண்டுள்ளேன் என்றும் குறிப்பிட்டார்-

## குண்டுவெடிப்பில் புலிகளின் தொடர்பு; நிரூபிக்க அரசாங்கம் விரும்பவில்லை

### காமினியின் வழக்கறிஞர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா உட்பட ஐம்பதுக்கும் அதிகமானோர் கொலையுண்டபாலத்துறை குண்டு வெடிப்பு சம்பவத்தில் விடுதலைப் புலிகளின் தொடர்பு இருப்பதை நிரூபிக்க அரசாங்கம் ஆர்வம் காட்டவில்லை. இவ்வாறு காமினி திசாநாயக்கா குடும்பத்தின் வழக்கறிஞரான சட்டத்தரணி தயா பெரேரா கூறியுள்ளார்.

நேற்று மாலை காமினி திசாநாயக்காவின் வீட்டில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்

இக் கொலையை யார் செய்திருப்பார்கள் என்பதில் எனக்கு எதுவித சந்தேகமும் இல்லை. ஏனெனில் தமது இலக்கை எவ்வளவு சிரமத்தின் மத்தியில் அடையவும் புலிகள் தயங்குவதில்லை. அவர்கள் சேதத்தைப் பற்றி அக்கறைப்படாது தமது குறிக்கோளே பிரதானம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பக்கம் பக்கமாக சைக்கிள் ஓட்டுவோர் மீது நடவடிக்கை

### ஒன்பதாம திகதி முதல் ஆரம்பம்

பக்கம் பக்கமாகச் செல்லும் துவிச்சக்கரவண்டிகள் செலுத்துனர் மீது எதிர்வரும் ஒன்பதாம் திகதி புதன்கிழமை முதல் காவல்துறையினர் ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அறிக்கையொன்றின் மூலம் அறியத்தந்துள்ளார்.

அவ் அறிக்கையின் விபரம் வருமாறு; கடந்த சில மாதங்களாக யாழ் குடாநாட்டுப் பிரதேசத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதை காணக்கூடியதாக இருக்கிறது. இதனால் ஏராள

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாவாந்துறையில் கோஷ்டி மோதல்; இரு வீடுகள் தீக்கிரை; பலர்காயம்

### காவல்துறையின் தீவிர நடவடிக்கைகளால் நிலைமை கட்டுப்பாட்டில்

(யாழ்ப்பாணம்)

விளையாட்டு மைதானம் தொடர்பாகஏற்பட்டசர்ச்சை ஒன்று பெரும் கோஷ்டிமோதலில் முடிவடைந்தது.

நாவாந்துறையில் உள்ள இரு பிரபல உதைபந்தாட்ட அணிகளைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்ட இம் மோதலானது தமிழீழ காவல்துறையினரின்தீவிர நடவடிக்கையின் மூலம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

இந்த மோதலில் 20 பேர் வரையில்காயமடைந்தனர்இரு வீடுகள் எரிக்கப்பட்டனமூன்று வீடுகளின் உடைமைகள் சேதமடைந்தன. 8 பெண்கள் உட்பட 45க்கும் மேற்பட்டோர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று நாவாந்துறை பகுதியில் விளையாட்டு மைதானத்தின் காணி தொடர்பாக இரு விளையாட்டு அணிகளிற்கு இடையில் சர்ச்சை ஏற்பட்டது- இந்த சர்ச்சை கைகலப்பாக மாறியதைத் தொடர்ந்து இரு விளையாட்டு அணிகளைச் சேர்ந்த ஆதரவாளர்கள் பெரும் கைகலப்பில் ஈடுபட்டனர், இம் மோதலின்போது போத்தல்கள், கற்கள் சரமாரியாக பாவிக்கப்பட்டதால் 20 பேர்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## கலகம் விளைவிப்போர் மீது கடும் நடவடிக்கை

(கொழும்பு)

நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் பிரசாரங்கள் யாவும நேற்று நள்ளிரவுடன் முடிவுற்றன. இதேசமயம, தேர்தலின் முன்போ, பின்போ வன்முறைகள் வெடிக்கலாம் என்ற அச்சத்தின காரணமாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரமாக்கபபட்டுள்ளன அத்தோடு தேர்தல் காலங்களில் வன்முறையைத் தூண்டுபவர்கள், கலவரங்களை விளைவிப்போர் மீது கடும நடவடிக்கை எடுக்குமாறு பொலிசாருக்கும் ஆயுதப்படையினருக்கும உத்தரவுகள வழங்கபபட்டுள்ளன.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்கள் நேற்று நள்ளிரவுடன் முடிவுற்றன. வானொலி, தொலைக்காட்சி மூலமான பிரசாரங்கள் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தன

பிரதமர் சந்திரிகா தனது இறுதிநேர பிரசாரக்கூட்டங்களை நேற்று மாத்தறை, அம்பாறை, காலி, களுத்துறை, புத்தளம், நித்தம்புவ ஆகிய இடங்களில் நடத்தினார். இறுதிக் கூட்டம் பொரளை சம்பல் பூங்காவில் நேற்றிரவு நடைபெற்றது.

ஐ. தே. க வேட்பாளர் சிறிமா திசாநாயக்கா சார்பாக நேற்று ஹைட்பார்க், நம்புக்கனை, காலி ஆகிய இடங்களில் கூட்டங்கள் நடைபெற்றன;

இதேசமயம் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில பெரும் வன்முறைகள் நிகழலாம் என அரசாங்கம் அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகன்றது- கடந்தகால ஐ-தே-க-வின் ஆட்சியின்போது பெருமளவு ஆயுதங்கள அரசியல்வாதிகளுக்கும்

(6பக்கம் பக்கம் பார்க்க)

### ஹபரணவில் தபால்கள் வந்தன

யாழ். மாவட்ட தபாலகங்களுக்கு 'ஹபரண' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட தபால் பொதிகள் நேற்று கப்பலில் இருந்து இறக்கப்பட்டன,

தபால் திணைக்கள ஊழியர்களால் 254 தபால் பொதிகள் இறக்கப்பட்டு யாழ். பிரதான தபாலகத்திற்கு எடுத்து வரப்பட்டது. தபால்கள் இன்று முதல் விநியோகிக்கப் படவுள்ளன, (யோ)

## கேகாலையில் ஐ.தே.க - பொ.ஐ.மு: ஆதரவாளர் கோஷ்டி மோதல்

### மாகாணசபை உறுப்பினர் உட்பட மூவர் பலி

(கொழும்பு)

கேகாலை மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில ஐ.தே.க மாகாணசபை உறுப்பினர் ஒருவரும், பொ. ஐ மு. ஆதரவாளர் இருவரும் பலியாகினர்.

கேகாலை கெட்டியாமுல்லையில் நடைபெற்ற இம் மோதலில் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது, இதனால் பெணமணி ஒருவர் காயமடைந்தார்.

இதனையடுத்து சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்ற பொலிசார் மீதும் துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது- இதனையடுத்து பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், ஐக்கிய தேசியக் கட்சி மாகாணசபை உறுப்பினர் ஜொலிய விமலசேன

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை, நிறுவனங்கள் வழமை போல் இயங்கும்

### 8ம், 9ம், 10ம் திகதிகளில்

பொதுமக்களின் நன்மைகருதியும், பாடசாலை மாணவரின் கல்வியையும், பரீட்சையையும் கருத்தில் கொண்டு நாளை தொடக்கம் 10-ம் திகதி வரைக்கும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள அரச திணைக்களங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும், சகல பாடசாலைகளும் தங்களு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பிரசாரக் கூட்டத்தில் குண்டு வெடிப்பு நால்வர் பலி

(கொழும்பு)

சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசார இறுதி நாளான நேற்றிரவு குண்டொன்று வெடித்ததில் நால்வர் பலியானதாக பி. பி- ஸி- தெரிவித்தது-

தேர்தல் பிரசார முடிவின் இறுதி சில மணிநேரத்திற்குள் இக் குண்டு வெடித்ததாக பி. பி ஸி மேலும் தெரிவித்தது

## புலிகளுடன் பேச்சு நடத்தாமல் அமைதித்தீர்வு சாத்தியமற்றது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படாமல் அமைதித் தீர்வு காண்பது சாத்திய மற்றதாகும் இவ்வாறு அரசு தரப்புப் பிரதிநிதிகளாக யாழ்ப்பாணம் சென்ற தூதுக்குழுவில் இடம்பெற்றிருந்த பிரமுகர் ஒருவர் கூறியுள்ளார் அவர் மேலும் கூறுகையில், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படாமல் சமாதானத் தீர்வு காண்பது சாத்தியமற்றது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணப்படும் சாத்தியம் இல்லை சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகளை அடக்க

( 6 ஆம்பக்கம் பார்க்க )

## புலிகளுடனான பேச்சுவார்த்தையில் அரசாங்கம் உறுதியாய் உள்ளதாம்

[கொழும்பு]

சில தடைகளினால் சமாதானப் பேச்சுக்கள் ஒத்திவைக்கப்பட்ட போதிலும் தொடர்ந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை மேற்கொள்வது என்ற உறுதியான கொள்கையில் பொதுஜன ஐக்கிய முன்னணி இருப்பதாக கொழும்பு பிரபல வாரப் பத்திரிகையொன்றின் செய்தி ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானம் ஒன்றை ஏற்படுத்த பொதுஜன ஐக்கிய முன்னணி ஒன்றினால் மட்டுமே முடியும் என்றும் எனவே ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா வெற்றியீட்ட வேண்டும் என்பதனை அக் கட்சி வற்புறுத்தி வருகின்றது- குண்டுத் தாக்குதலின் பின் வரும் சமாதான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதென்ற நோக்கத்தில பொதுஜன ஐக்கிய முன்னணி செய

[6ஆம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதி தேர்தலின் பின் புதிய அரசியல் கட்சி?

(கொழும்பு

ஜனாதிபதி தேர்தலின் முடிவுகளைத் தொடர்ந்து புதிய அரசியல் கட்சியொன்று உருவாகும் சாத்தியம் இருப்பதாக கொழும்பு செய்திகள் மூலம் தெரியவருகிறது

ஐதேகவின் ரணில் பிரிவும் சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் சிலரும் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும்மேலும் கூறப்படுகிறது மேலும் ஐதேக அரசியல்வாதிகளான பிரபல பிரமுகர்கள சிலரது புதல்வர்களும் கூட இப்புதிய கட்சியுடன் இணையக் கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது

மேலும் ஜனநாயக ஐக்கிய

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**புலமைப் பரிசிற் பயிற்சி**

வெளிவந்து விட்டது! விற்பனையாகிறது. ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சி 15 வினாத்தாள்கள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 24 தமிழ் கட்டுரைகள். 14 ஆங்கிலக் கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டது. புத்தம் புதிய பயிற்சி. விசேட கழிவு உண்டு புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (9992)

**ஆண்டிறுதிப்பரீட்சை**

ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 8 வரையுள்ள வகுப்புகளுக்கு ஆண்டிறுதிப் பரீட்சை வினாத்தாள்கள் (சகலபாடமும்) 06. 11. 94 ஞாயிறு வெளியிடப்படும். தேவையானோர் பெற்றுக்கொள்ளலாம் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (9991)

**கண்டெடுக்கப்பட்டுள்ளது**

மணிபேர்ஸ் ஒன்று எமது ஸ்தாபனத்தில் கண்டெடுக்கப்பட்டு ஸ்தாபன உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது- இதை உரியவர் ஆதாரம்காட்டி பெற்றுக்கொள்ளவும் உரிமையாளர் விதுரா ஆடை அகம் நவீன சந்தை யாழ்ப்பாணம்- (சி-10660)

**பாலர் ஆசிரியராக சந்தர்ப்பம்**

பயிற்சியில் சேர சந்தர்ப்பம் கடைசித் தகைமை க-பொ-த (சா/த) சனி, ஞாயிறு கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம்- பாலர் ஆசிரியர் சங்கம் மே/பா உயர் கலைக்கல்லூரி ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்- [9998]

## இலவச பற்சிகிச்சை

(தென்மராட்சி)

விவசாயிகளை ஊக்குவிப்பதன் நோக்கத்திற்காக பளை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் பச்சிலைப்பள்ளி பகுதியில் தமது கழகத்தில் பதிவு செய்த விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் விவசாயப் பொருட்களை வழங்கி வருகின்றனர்

பேட்டுநில செய்கைக்கு என 300 பேருக்கும் நெல் செய்கைக்கு என 200 பேருக்கும் உரம் கிருமி நாசினிகள் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது கடன் பெறுவர்கள் இப் பயிர்களை செய்து பின்னர் சந்தைப்படுத்தி மீள வட்டியில்லாமல் செலுத்தவேண்டும் (86)

## உவர் நிலம் ஆய்வு

சிறுகடல்களை அண்டிய வெளியான பிரதேசங்களில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளுமுகமாகவும் மண்ணரிப்பை தடுத்து உவர்தன்மையை குறைப்பதற்குமாக அந்த இடங்களில் வளரக் கூடியதும் உவர் தன்மையை மாற்றம் அடையச் செய்வதுமான மரங்களை இவ்வாண்டு நடுகை செய்வதற்கென உவர் நில ஆய்வு ஒன்றினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இதனடிப்படையில் தற்போதைய மழை காலங்களில் கூடிய நீர் தேக்கம் காணப்படுவதால் உவர்நீரை அண்டிய அணைக்கட்டு ஓரங்களில் 10 அடி இடைவெளிகளில் சின்னக் கருவேல், வெல்வேல் சவுக்கு, இலைகருவேல் ஆகிய இன மரங்கள் நடுகை செய்யப்படவுள்ளன.

இவ் ஆய்வில் நிலபயன்பாட்டு உத்தியோகத்தர், அரச, அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், கோப்பாய் உதவி திட்டமிடல் பணிப்பாளர், கோப்பாய் விவசாய போதனாசிரியர், கோப்பாய் வடக்கு கிராமசேவகர், வன இலாகாவட்ட உத்தியோகத்தர்கள் கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஆகியோர் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# சமாதானத்தின் விரோதிகள் யார்? முன்னாள் பிரிகேடியர் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்று வரும் போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு யுத்த தளபாடங்கள் மற்றும் கருவிகளின் இறக்குமதியாளர்கள், யுத்தம் நீடிப்பதால் லாபமடையும் ஊழல் அரசியல் வாதிகள், இராணுவத்தில் சிறுபான்மையாகவுள்ள சில உயரதிகாரிகள் போன்றோர் தடையாகவுள்ளனர்.

இவ்வாறு சிறிலங்கா இராணுவத்தின் முன்னாள் பிரிகேடியர் நாரத விக்கிரமரட்ணா கூறியுள்ளார். கொழும்பிலிருந்து வெளியாகும் ஐலண்ட் நாளிதழில் சமாதானத்தின் எதிரிகள் யார் என்ற தலையங்கத்தில் எழுதிய கட்டுரையொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## வாழ்க்கைத்திறன் கல்வி நிலையம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கும் சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவில் 'வாழ்க்கைத் திறன் கல்வி நிலையம்' ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. எழுத்தறிவற்றோருக்கு அதனை ஊட்டுவதை முக்கிய நோக்காகக் கொண்ட இந்நிலையம் சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. (22)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
சுந்தரம்பிள்ளை திருச்செந்தூர்நாதன்
(சந்திரன்)

அன்னையின் மடியில் 22-4-1964 — இறைவனடியில் 14-11-1988

திதி
7-11-1994

மரணம் என்னும் சுழல்காற்றில் எம்மை விட்டுப் பிரிந்துபறந்து விட்டாயா?
அன்பாளா எம் இனிய சந்திரா

காரைக்கால்
இணுவில் கிழக்கு
இணுவில்

உன்பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

[10002]

கல்வித்திணைக்களத்தின்

## நிதிக்கிளை மூலமே வேதனம் வழங்கப்படும்

(நல்லூர்)

கொள்கைத் திட்டமிடல் அமைச்சினால் யாழ் கல்வித் திணைக்களத்திலும் கோட்டக்கல்வி அலுவலகங்களிலும், பாடசாலைகளிலும் நியமிக்கப்பட்டு நிர்வாக உதவியாளர்களாக தற்போது கடமையாற்றும் பட்டதாரிப் பயிலுநர்களுக்குரிய மாதாந்த சம்பளக் கொடுப்பனவுகளை யாழ்கல்வித்திணைக்களத்தில் நிதிக்கிளையே மாதாமாதம் வழங்கும் என யாழ் கல்வித் திணைக்களக் கணக்காளர் ஆர். சுகுணதீரன் சகல கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர்களுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்-

மேலும் இவர்களுடைய கடமைக்குரிய வரவுச் சான்றிதழ்களை உறுதிப்படுத்தி மாதம் மாதம் தமக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் இவர்களுக்குத்தெரியப்படுத்திஉள்ளார்- (17)

## தேர்தல் வாக்குச் சீட்டு அனுதாப அட்டை அல்ல

ஏ. ஜே. ரணசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வாக்குச்சீட்டு ஒரு அனுதாப அட்டையாக மாறாது வாக்காளர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் அது அநுதாப அட்டை அல்ல என ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடும் ஏ. ஜே ரணசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார் ஊழல் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் அரசு உறுப்பினர்கள் நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கக்கூடாது இவர்கள ஊழல் குறித்த விசாரணைக் குழுக்களிடமிருந்து தப்பிக்கவே இவ்வாறு நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர் இவ்வாறு அவர்களை வெளியேற அனுமதிப்பதால் ஊழல் விசாரணைக்குழுக்களை அமைத்ததில் பயனேதும் இல்லாமற் போய் விடும் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்,

## ஹேமாவை தேசியபட்டியலில் நியமிக்க சிறிமா கோரிக்கை

(கொழும்பு)

திருமதி ஹேமா பிரேமதாசாவை ஐ தே. க தேசியப் பட்டியலில் சேர்க்குமாறும் அவரது மகன் சஜித் பிரேமதாசாவை ஐ-தே-க நிறைவேற்றுக்குழுவில் நியமிக்குமாறும் திருமதி சிறிமா திசாநாயக்கா ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். காமினி திசாநாயக்காவிற்கு ஆதரவாக பிரசாரப் பணியில் ஈடுபட்டுவந்த ஹேமா பிரேமதாசாவும் சஜித் பிரேமதாசாவும் தற்போது திருமதி சிறிமா திசாநாயக்கா பகிரங்க மேடையில் தோன்றாத நிலையில் தாமே பிரசாரங்களை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## அரசாங்கக் கேள்வி அறிவித்தல்

1995ஆம் ஆண்டு யாழ் பெரும்பாகத்தில் (கிளிநொச்சி மாவட்டம் தவிர்ந்த) உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் 1994ஆம் ஆண்டு நவம்பர் 23-ம் திகதி முற்பகல் 10 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவம் வழங்குவதற்கான இறுதித் திகதி 22-11-94 நண்பகல் 12 00 மணியாகும். முழுவிபரமும் எனது பணிமனையில் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளது.

பிற்குறிப்பு: மூலப்பிரதியிலான ஜி-170 படிவத்திலுள்ள பெறுமதியுறுதிச் சான்றிதழ் மட்டுமே, பெறுமதியுறுதிச் சான்றாக ஏற்றுக் கொள்ளப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

ஒப்பம் / நா. விவேகானந்தன்
தாய்சேய் நல வைத்திய அதிகாரி,
மாகாண பிரதிப் பணிப்பாளருக்காக.

மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை / சுகாதார சேவைகள்,
33, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
28-10-94

(10649)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ் கிளை தெல்லிப்பளை பிரிவின் ஒத்திவைக்கப்பட்ட

## 1994-ம் ஆண்டு பொதுக்கூட்டமும் பிரிவுத்தேர்தலும்

மேற்படி கூட்டமும், புதிய உத்தியோகத்தர் தெரிவும் 20-11.94இல் நடைபெறும். மனுப்பத்திரங்களை 09-11-94 தொடக்கம் 11-11-94 வரை தெல்லிப்பளை பிரிவுக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்திய மனுப்பத்திரங்கள் 12-11-94 அன்று மு.ப. 9-00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை பிரிவுக் காரியாலயத்தில் ஏற்கப்படும். 14-11-94 அன்று மு.ப. 9-00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை பிரிவுக் காரியாலயத்தில் விரும்பியோர் தமது மனுவை வாபஸ் பெற்றுக் கொள்ளலாம். பொதுக்கூட்டம் யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் 20-11 94 அன்று மு.ப. 10-00 மணிக்கு நடைபெறும். அக்கூட்டத்தில் தேர்தல் நடைபெறும். 12-02-94க்கு முன்னதாக 1994 அங்கத்துவப் பணத்தை பிரிவின் ஊடாக கிளையில் செலுத்திய இலங்கை செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர் மட்டுமே இப் பொதுக்கூட்டத்திலும், தேர்தலிலும் பங்குபற்ற தகுதியுடையோராவர்.

ஆலை ஒழுங்கை,
மல்லாகம்.
05-11-94

கௌரவ செயலாளர்
தெல்லிப்பளை பிரிவு.
இ. செ. சி. சங்க யாழ் கிளை
(சி-10653)

## பொலிகண்டி கந்தவன ஆலய சூரன் போர்

காலம்: 8.11.1994 செவ்வாய் இரவு
மாலை 6 மணி வசந்தமண்டப பூசை தொடர்ந்து சூரன்போர்

இரவு 9 30 "முருகனும் தமிழும்"
வழங்குபவர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் M. A. அவர்கள்
(ஆய்வாளர், இக்குசுயின் பல்கலைக்கழகம், யப்பான்)

இரவு 10.30 "ஆறுமுகமான பொருள்"
வழங்குபவர் பேராசிரியர் கலாநிதி
திரு. அ. சண்முகதாஸ் அவர்கள்
(தலைவர் தமிழ்த்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

இரவு 11.30 பட்டிமன்றம்

காப்பிய மரபில்
ஆணவம் மிக்கவன்

| கம்பன் காட்டும் இராவணனா? | கச்சியப்பர் காட்டும் சூரன்மனா? |
|---|---|
| 1. திரு. தி. நடராசா (துணை அதிபர் நெ-ம-ம. வி-) | 1. திரு. த. கலாமணி (விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்) |
| 2. திரு. க, நவரத்தினம் ஆசிரியர் | 2. திரு. ஆ. சிவநாதன் ஆசிரியர் |
| 3. திரு. இரகுநாதன் ஆசிரியர் | 3. திரு. ஐ. கதிர்காம சேகரன் ஆசிரியர் |

நடுவர்: பண்டிதர் சிவஸ்ரீ கை. நமசிவாயக் குருக்கள்
(சைவசமய சேவைக்கால ஆலோசகர்)

இரவு 1.30 இன்னிசைக் கச்சேரி
செல்விகள் நவரத்தினம் ஜெயதர்சினி
" ஜெயபாரதி

-தர்மகர்த்தா சபை

(10001)

## நினைவு கூருகின்றோம்...

**07. 11. 94**

1985-ம் ஆண்டு இதே தினத்தில் கிளி - பரந்தன் உமையாள்புரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**நிசாந்தன்** (- ராஜேந்திரன்-பரந்தன் - கிளிநொச்சி)

மட்டு - திருப்பழுகாமம் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**நெல்சன்** (சின்னத்துரை உதயகுமார் - சேனைக்குடியிருப்பு, கல்முனை - அம்பாறை)

கிளி -கோணாவில் பகுதியில் எதிர்பாராதவிதமாக கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த,

**அசிஸ்** (பரமலிங்கம் தவனேசன் - இடதுகரை, முத்தையன்கட்டு - முல்லைத்தீவு)

கிளி- பரந்தன், உமையாள்புரம் பகுதியில் சிறிலங்கா இராணுவம் மீது மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சத்தியன்** (பரமசாமி கிருபாகரன் - குமரபுரம், பரந்தன் - கிளிநொச்சி)

1988 ம் ஆண்டு திருமலை - மூதூர், 55 ம் கட்டைப்பகுதியில் இந்தியப்படையினரின் முன்னிலையில் தேசவிரோதிகளால் வெட்டிக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**ரகு**

1989-ம் ஆண்டு வில்பத்துக் காட்டுப் பகுதியில் சிறிலங்காப்படையினருடன் ஏற்பட்ட எதிர்பாராத சமரில் வீரச்சாவெய்திய,

**ஆழ்வார்** (நாகராசா கனகசுந்தரம் - செட்டிகுளம் - வவுனியா)

**கப்டன் சத்தியராஜ்** (பார்போன் கிறிஸ்ரி - உயிலங்குளம் - மன்னார்)

1990 ம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மது** (வடிவேல் ஆனந்தசிவம் - மீசாலை வடக்கு - சாவகச்சேரி)

1993ம் ஆண்டு மட்டு - சளுவந்தன் சேனைப் பகுதியில் எம்மவர்கள் சென்றுகொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**2-ம் லெப் இராஜேந்திரகுமார். ஆதவன்** (சண்முகம் தயாளலிங்கம் - மகிழடித்தீவு - மட்டு)

மட்டு - ஆயித்தியமலை, மாவடியாறுப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ராஜாதித்தன்** (மனுவேல் ரமேஸ் - புதூர், சேற்றுகுடா - மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10657)

## நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைக்கான அழைப்பும்



**திருமதி இராசம்மா சேனாதிராஜா**

தோற்றம்: 28-09-1911 — மறைவு: 08-10-1994

எங்கள் அன்புத் தாயார் திருமதி இராசம்மா சேனாதிராஜா அவர்களின் ஈமச் சடங்கில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதலளித்து தேற்றியோர், மலர் வளையம் சாத்தியோர் அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், இறுதிக்கிரியைகள் நடந்தேற சகல வழிகளிலும் உதவி ஒத்தாசைகள் நல்கியோர் அனைவருக்கும் எம் மனம் பணிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இன்று 07-11-94 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற அந்தியேட்டி (காலை 6மணி) சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்புவதில் உள்ள வசதியீனங்களுக்காக எங்களை மன்னித்து இவ்வழைப்பை ஏற்று வருகை தருமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

"சத்திய வாசா"
இமையாணன்,
உடுப்பிட்டி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
தகவல்: சே. இரவீந்திரநாதன்.

[10003]

## 75 வீத மலையக வாக்குகள் பிரதமருக்குக் கிடைக்கும்

- வி.பி. கணேசன்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்க மலையக வாக்குகளில் எழுபத்தைந்து சதவீதமானவற்றைப் பெறுவார் என மலையகத் தொழிற்சங்கப் பிரமுகரான வி. பி. கணேசன் தெரிவித்துள்ளார்.

மலையகத்திலுள்ள பெரும்பான்மையான அரசியல் சக்திகளும், தொழிற் சங்கங்களும் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவை முழுமையாக ஆதரிக்க முன்வந்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பிரதி அமைச்சரை நோக்கி துப்பாக்கிச் சூடு

### கொலை செய்யத் திட்டமாம்

(கொழும்பு)

நீர்ப்பாசன பிரதி அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை படுகொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியொன்று முறியடிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா வானொலி நேற்று முன்தினம் தெரிவித்தது.

பொலனறுவையில் பிரசாரக்கூட்டமொன்றில் உரையாற்றுவதற்காக வந்த அமைச்சரை நோக்கி ஆயுதம் தாங்கிய குழு ஒன்று துப்பாக்கியினால் சுட முயன்றதாகவும் அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரிகள் ஆகாயத்தை நோக்கி சுட்டு அவர்களை கலைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் சிலர் கைது செய்யப்பட்டு பொலநறுவை பொலிசில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாலத்துறைக் குண்டுவெடிப்பு

## 14 இரசாயனப் பொருள்கள் பொலிசாரால் மீட்பு

(கொழும்பு)

பாலத்துறை குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் கண்டு எடுக்கப்பட்ட இரசாயனப் பொருள்களை அரசாங்க இரசாயன பகுப்பாய்வுப் பிரிவிற்கு அனுப்புவதற்கான அனுமதியை இரகசியப் பொலிசார் கொழும்பு மேலதிக நீதிபதியிடம் கோரியுள்ளனர்.

இக் குண்டுவெடிப்பு நடந்த இடத்திலிருந்து பதின்நான்கு இரசாயனப் பொருள்கள் பெறப்பட்டுள்ளதாகவும் இவை தற்போது நீதிமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இப் பொருள்கள்மீது ஆய்வை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வேண்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பூமிபுத்ர வேட்பாளர் உரை பிரதமரை அவமதிக்கிறது

### ரூபவாகினிக்கு ஆட்சேபம்

(கொழும்பு)

சட்டத்தரணி டி. எஸ். ரூபசிங்க இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் சிங்கள மகாஜன பூமி புத்ர கட்சியின் வேட்பாளர் ஹரிச்சந்திரா விஜயதுங்கா ரூபவாகினிமூலம் ஆற்றியுள்ள தேர்தல் பிரசார உரை பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க விற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த இரண்டாம் திகதி ரூபவாகினியில் ஒளிபரப்பான ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் ஹரிச்சந்திர விஜயதுங்காவின் உரை பிரதமர் திருமதி சந்திரிகாவிற்கு அவப்பெயரை உண்டாக்கியிருப்பதாகவும் தேர்தல் பிரசார உரைகளில் அவதூறு ஏற்படுத்தும் அம்சங்கள் இடம் பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்தும்படியும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## தேர்தலில் ஒத்துழைக்க வேட்பாளர்கள் கோரிக்கை

(கொழும்பு)

ஊழலும், துஷ்பிரயோகமும் அற்ற வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டியது அவசியம் என்று தேர்தலில் போட்டியிடும்வேட்பாளர்கள் அனைவரும் ஒத்த குரலில் தெரிவித்துள்ளனர்.

இந்தமுயற்சி வெற்றியளிக்க பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா, சிறிமாவஜிரா திசாநாயக்கா, ஹரிச்சந்திரா விஜேய துங்கா, ஏ. ஜே. ரணசிங்க, ஹட்சன் சமரசிங்கா ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சொகுசு வாகனங்கள் ஒரு கோடி 17லட். ஏலம்

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் அமைச்சர்களாலும், இராஜாங்க அமைச்சர்களாலும் பாவிக்கப்பட்ட ஒன்பது சொகுசு வாகனங்கள் ஒரு கோடி 17 இலட்சம் ரூபாவுக்கு நேற்றுமுன்தினம் பத்தரமுல்லையில் நடந்த ஏலவிற்பனையில் விற்கப்பட்டன.

இவ் ஏலத்தில் ஒரு பி.எம். டபிள்யூ காரொன்று 42 இலட்சம் ரூபாவுக்கு விற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாவட்டத்திற்கு மேலும் ஒரு பொலிஸ் குழு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில், இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் கடமைக்காக மேலும் ஒரு பொலிஸ் குழு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தேர்தல் நடவடிக்கைக்காக ஏற்கனவே ஒரு பொலிஸ் குழு அனுப்பப்பட்டுள்ளதாகமுன்னர் செய்திகள் தெரிவித்தன. காங்கேசன்துறை ஆனையிறவு, பலாலி, ஊர்காவற்றுறை ஆகியபகுதிகளில் அமைக்கப்படும் வாக்களிப்பு நிலையங்களுக்கே பொலிசார் அனுப்பப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## மூன்று ரெலோ உறுப்பினர் செங்கலடியில் சுட்டுகொலை

(மட்டக்களப்பு)

செங்கலடியில் ரெலோ குழு உறுப்பினர்கள் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த திங்களன்று பாடசாலை மாணவர் சீருடையில் வந்த சிலர் இவர்கள் மூவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர்

## ஊழல் மோசடி தொடர்பாக 18 பொலிஸ் அதிகாரிகள் கைது

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம்பதவியேற்றபின் மேற்கொண்ட ஊழல், மோசடி தொடர்பான விசாரணைகளின் பேரில் கைதாகியுள்ளோரில் பதினெட்டு உயர் பொலிஸ் அதிகாரிகளும் அடங்குவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை விட இராணுவ கடற்படை உயர் திகாரிகள் பலரும் முறைகேடாக பெறப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக விசாரிக்கப்படவுள்ளதாகவும், இதுவரை விசாரணைகளின் அடிப்படையில் காணி அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், வைத்தியர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள் எனப்பலரும் கைதாகியுள்ளதாகவும் ஊழல் தடுப்பு திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மேஜர் கணேஸுக்கு மாலை அணிவித்து அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போரில் தனது இன்னுயிரை ஆகுதியாக்கிய மேஜர் கணேஸ் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவை முன்னிட்டு திருநெல்வேலிச் சந்தியில் அமைந்துள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம்மாலை 4-40 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈகச் சுடரை திருமலை மாவட்ட தொடர்பப் பொறுப்பாளர் ரஞ்சி அவர்கள் ஏற்றிவைத்தார்.

மாவீரரின் சகோதரன் உருவப்படத்திற்கு மலர் மாலையை அணிவித்தார். இதனைத் தொடர்ந்து திருமலை மாவட்ட மாவீரர் செயற்பாட்டுக் குழு உறுப்பினர்களும் போராளிகளும் மலரஞ்சலி செலுத்தினர். (பா)

## விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோருக்குரிய செப்ரெம்பர் மாத முதல் இரண்டு வாரங்களுக்கான நிவாரண உலர் உணவுப் பொருட்களாக அரிசி, மாவு சீனி, சித்தாமணிக் கடலை, சோப்வகைகள் என்பவற்றுடன் மூன்றும், அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களையுடைய குடும்பங்களுக்கு லக்ஸ்பிறே பால்மா என்பன வழங்கப்படும் என செயலக புனர்வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரண முத்திரையின் 19 ஏ இலக்க புள்ளிக்கு வழங்கப்படவுள்ள இப்பொருட்களின் விநியோகத்தை இம் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் முடித்துக் கொள்ளுமாறும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## பூமி புத்ர வேட்பாளர் பகிரங்க கூட்டத்தை தவிர்ப்பு

(கொழும்பு)

சிங்களயே மகா சம்பத பூமி புத்ர கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஹரிச்சந்திர விஜேதுங்க பாதுகாப்புக் காரணங்களுக்காக பகிரங்க பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தீவிரமாக இனவாத பிரசாரத்தை மேற்கொண்டு வரும் இவர் தமது பேரினவாதக் கருத்துகளை தொலைக்காட்சி, வானொலி மூலமாகவே பிரசாரம் செய்து வருகிறார்.

தமிழ் வாக்குகளோ, முஸ்லிம் வாக்குகளோ தமக்கு தேவையில்லை எனவும் தூய சிங்கள வாக்குகள் மூலமே தாம் வெற்றி பெற விரும்புவதாக இக் கட்சியின் வேட்பாளர் ஹரிச்சந்திர விஜேதுங்க தனது தொலைக்காட்சி உரையில் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## பொஸ்னிய மத்திய நகர் குரோஷியர்களிடம் வீழ்ந்தது

(சரஜேவோ)

பொஸ்னிய குரோஷியர்கள் மத்திய நகரமான குப்ரிஸை கடந்த வியாழன் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர். குரோஷியர்களையும் முஸ்லிம்களையும் கொண்ட கூட்டுப்படைகள் சேர்பியத் துருப்புகளை பின்வாங்கச் செய்ததையடுத்து குப்ரிஸை கைப்பற்றியதாக பொஸ்னிய குரோசியர்கள் அறிவித்தனர்.

இத் தோல்வி குறித்து கருத்து தெரிவித்த பொஸ்னிய சேர்பியத் தலைவர் ரடாவன் கராட்சிக் முன்னைய யூகோஸ்லாவிய குடியரசில் தாம் கட்டுப்படுத்தும் 70 சதவீதமான பகுதியில் யுத்தம் பிரகடனம் செய்வதுபற்றி விரைவில் அறிவிப்போம் என்றார். பொஸ்னியாவின் இரண்டரை வருடகால போரில் டாங்கிகள் ஏவுகணைகள் ஆகியவற்றில் சிறந்துவிளங்கும் சேர்பிய துருப்புகள் குப்ரிஸை இழந்தது முக்கிய தோல்வியாக கருதப்படுகிறது.

இதேசமயம் ஐ நா பொதுச் சபை பொஸ்னியாவுற்கு எதிரான ஆயுதத்தடையை அகற்றுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியதோடு பொஸ்னிய போருக்கு சேர்பியரே காரணம் எனவும் குற்றஞ்சாட்டியது. சபையில் பேசிய பொஸ்னிய பிரதிநிதி ஆயிரக்கணக்கான ஐ நா அமைதிப் படையினர் தம் நாட்டில் இருப்பதைவிட ஆயுதத்தடையை அகற்றுவதையே தன் நாடு விரும்புவதாக கூறினார்.

## அண்ணா குறித்த சேஷன் நூல் வாபஸ் பெறப்பட முடியாது

அண்ணாவைக் களங்கப்படுத்தும் சேஷன் புத்தகம் வாபஸ் பெறப்பட மாட்டாது என்று அதன் பதிப்பாளர் நாயர் தெரிவித்துள்ளார். சேஷனின் வாழ்க்கை வரலாறு பற்றிய புத்தகத்தை தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, வங்காளம், கன்னடம் ஆகிய மொழிகளில் வெளியிடத் திட்டமிட்டுள்ளோம் என்றும் நாயர் தெரிவித்தார்.

ஏராளமானோர் என்னை சந்தித்து புத்தகத்தின் பிரதியைக் கேட்டு வாங்கிப் போகின்றனர். இது மகிழ்ச்சி அளிக்கின்றது. புத்தகம் வெளியிட விதிக்கப்பட்ட நீதிமன்ற தடையை நான் கண்டுகொள்ளப் போவதில்லை. டலத்த எதிர்ப்பு எழுந்துள்ளதால் புத்தகத்தில் சர்ச்சைக்குரிய பகுதி நீக்கப்பட மாட்டாது. அந்நூலின் எல்லாக் கருத்துகளும் தீர ஆய்வு செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்ட பின்னரே அச்சிடப்பட்டுள்ளன. எனவே அண்ணா பற்றி சேஷன் கூறியதை வாபஸ் பெறமுடியாது. சேஷன் நேரில் கூறியதைத்தான் கோவிந்தன் குட்டி புத்தகமாக எழுதியுள்ளார். எனவே எந்தப் பிரச்சினை வந்தாலும் சேஷன் அதை சந்திக்கத் தயாராக உள்ளார்.

புத்தகத்தின் ஏராளமான பிரதிகளை ஏற்கனவே நாட்டின் பல பகுதிகளுக்கும் அனுப்பி விட்டோம். அவற்றை விற்காமல் நிறுத்தி வைப்பதோ விற்ற பிரதிகளைத் திரும்பப் பெறுவதோ கட்டுப்பாட்டில் இல்லை. சேஷனின் வாழ்க்கை வரலாறு தவிர இன்னும் பல சுவையான அரசியல் தொடர்பு உள்ள புத்தகங்களை வெளியிட உள்ளேன். அடுத்ததாக பாகிஸ்தானில் மணிதீட்சித்தின் செயற்பாடு என்ற மொழிபெயர்ப்பு நூல் வெளியிடப்படும். சேஷன் நூல் எமது கடின உழைப்பில் உருவானது எம் உழைப்பு வீணாக நான் விடமாட்டேன் என்றும் அந்நூலின் பதிப்பாளரான நாயர் மேலும் தெரிவித்தார்.

## சேஷனின் சர்ச்சைக்குரிய நூல் எம்.ஜி.ஆர். குறித்தும் விமர்சனம்

(சென்னை)

இந்திய தேர்தல் தலைமை ஆணையாளர் சேஷனின் நூலில் அறிஞர் அண்ணா குறித்து எழுதப்பட்டுள்ள விடயங்கள் பெரும் சர்ச்சைகளை எழுப்பி வரும் இந்நிலையில் அந் நூலில் முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆர். குறித்தும் விமர்சிக்கப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்து முதலமைச்சர் ஜெயலலிதா விடுத்த அறிக்கை ஒன்றில் புரட்சித் தலைவர் பற்றி அவதூறு செய்தியை கழக தொண்டர்களும் தமிழகமக்களும் தாங்க மாட்டார்கள் அறிஞர் அண்ணா குறித்தும் எம் ஜி ஆர் குறித்தும் சர்ச்சைக்குரிய பகுதிகளை அந் நூலில் இருந்து நீக்கவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

எம். ஜி ஆர். குறித்து சேஷனின் நூலில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது எம் ஜி ஆர். ஏதாவது ஒரு முடிவை எடுத்தால் மற்றவர்கள் அதை நிறைவேற்றி வைக்க வேண்டும் என எதிர்பார்ப்பார் ஆனால் நான் அவரது விருப்பிற்கு மாறாக நடந்து கொண்டதால் என்னை பதவி இறக்கம் செய்ய முடிவு செய்தனர்.

தமிழ் நாட்டில் ஜனாதிபதி ஆட்சி நடைபெற்ற சமயம் நான் சென்னையில் தொழில் துறை செயலராக இருந்தேன் தமிழ் நாட்டில் ஊழலும் கொத்தடிமைத் தனமும் நிறைந்து இருந்தது.

எம். ஜி. ஆர். ஆட்சியில் கோட்டையில் 10 ஆவது மாடியில் தொழில் துறை செயலராக இருந்த என்னை எம் ஜி ஆர். எவ்வளவு கீழ் இறங்க முடியுமோ அந்தளவுக்கு கீழ் இறக்கி கீழ் தளத்திற்கு மாற்றினார். மிகப் பெரும் தொழிலதிபர் ஒருவருக்கு சொந்தமான ஒரு சிறு தொழிற்சாலையை அரசே ஏற்று நடத்த வேண்டும் என எம். ஜி. ஆர். என்னிடம் சொன்னார். இதில் எனக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்று அதில் சேஷன் குறிப்பிட்டுள்ளார்.

## தேனீ குடி கலைவதை தடுக்க சில நடவடிக்கை

இன்று தேனீ வளர்ப்பாளர்கள் இரண்டு வகையான பிரச்சினைகளினால் தேனீ குடிகள் கலைவதனால் பாதிப்பு அடைகின்றனர். முக்கிய இரு பிரச்சினைகளும் மெழுகு அந்தின் தாக்கமும் உணவுப் பற்றாக்குறையுமாகும்.

தேனீ குடிகளின் பிரதான எதிரியாக மெழுகு அந்துகள் காணப்படுகின்றன. எமது பிரதேசத்தில் இரண்டு வகையான மெழுகு அந்துக்கள் காணப்படுகின்றன- ஒரு வகை இரண்டு சென்ரிமீற்றர் நீளமான பெரியவை. மற்றையது ஒரு சென்ரிமீற்றர் நீளமான சிறியவை. இவ் அந்து தேன் பெட்டியில் உள்ள வெடிப்புக்கள், துவாரங்கள், நீக்கல்களினூடாக முட்டைகளை இடும். முட்டைகள் பொரித்து புழுக்கள் வதைச் சட்டங்களை சென்றடைந்து வதைகளை ஊடறுத்து உண்ணும். முழு வதைகளும் உண்ணப்பட்டு அவற்றில் உள்ள இடைவெளிகளில் வலைகள் காணப்படும். மெழுகு அந்துப் புழுக்களின் தாக்கத்தை தேனீக்களால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இயலாத போது தேனீக்கள் விட்டு வேறு இடத்துக்கு இடம் பெயரும்.

இப்பிரச்சினையைத் தடுக்க தேனீ கூடுகள் நீக்கல்கள், வெடிப்புக்கள், துவாரங்கள். அற்றதாக இருத்தல் வேண்டும். நல்ல பெட்டிகளில் தேனீ செல்லும் வாசலூடு மெழுகு அந்து உட்புகுந்து அடித்தளப்பலகையில் முட்டைகளை இடும். முட்டைகள் பொரித்து சிறிய புழுக்கள் அடித்தள பலகையில் கொட்டுண்டு கிடக்கும். மெழுகுக் கழிவுகளை உண்டு வளரும் வளர்ந்த புழுக்கள் வதைச்சட்டங்களை சென்றடைந்து வதைகளைத் தாக்கும். தேனீ வளர்ப்பாளர்கள் அடித்தளப்பலகைகளை கிழமைக்கு ஒரு முறை தூரிகையினாலோ, தேங்காய்த் தும்பினாலோ சுத்தம் செய்து வந்தால் இத் தாக்கத்தை பூரணமாக கட்டுப்படுத்த முடியும்.

இரண்டாவது பிரச்சினை உணவுப்பற்றாக்குறையினால் தேனீ சமுதாயம் நலிவடைவதாகும் இது மழை காலம் பூக்கும் மரங்கள் அருகி காணப்படுகின்றன எனவே தேனீக்களுக்கு உணவுத்தட்டுப்பாடு ஏற்படலாம் தேனீக்களுக்கு உணவு அருகி வரும் காலங்களில் தேனீக்கள் இல்லாத வதைகளைக் கொண்ட பலவீனமான தேனீச்சமுதாயங்களாக மாறும் இச்சந்தர்ப்பங்களில் மிகச் சுலபமாக மெழுகு அந்தினால் தாக்கப்படுகின்றன இத்தாக்கத்தின் விளைவால் கூட்டை விட்டு அகலும்.

உணவுப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக சீனிக்கரைசல் உணவாக கொடுக்கப்படவேண்டும்சீனியும் வெந்நீரும் சமபங்காக எடுத்து கரைத்து கொடுக்கலாம் நாளாந்தம் சிறிதளவு சீனிக்கரைசலை கொடுப்பதன் மூலம் தேனீக்களில் இனவிருத்தியை ஊக்குவிக்க முடியும் உணவு கொடுத்தல மாலை நேரங்களில் செய்வது சிறந்தது உணவு கொடுக்கும்போது தேனீ பெட்டியின் எறும்பு ஏறாதவாறு தடுத்தல்வேண்டும்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

## காமினி விஜேசேகராவிற்கு ஒருமில்லியன் ரூபா நஷ்டஈடு

(கொழும்பு)

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகராவின் மரணத்துக்கு சிறிலங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஒரு மில்லியன் ரூபாவை நட்டஈடாக வழங்கியுள்ளது

அவரது தனிப்பட்ட விபத்துக் காப்புறுதிக்கு அமைய இந்நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## ஒருலட்சத்து 40 ஆயிரம்பேர் போதைக்கு அடிமை

(கொழும்பு)

இலங்கையில் சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் பல்வேறு வகையான போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. போதைப் பொருள்பாவனைக்காக வருடாந்தம் 770 கோடி ரூபா செலவிடப்படுவதும் அறியப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் சுமார் 31 கோடி 50 இலட்சம் கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் 4403 பேர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## உலகில் இவ்வாண்டு 78 பத்திரிகையாளர் பலி

(பாரிஸ்)

இந்த ஆண்டில் இதுவரை உலகம் முழுவதிலும் 78 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனபிரான்ஸ் பத்திரிகையாளர் அமைப்பு ஒன்று கணிப்பிட்டுள்ளது இவ் வருடத்தை பத்திரிகையாளர்களுக்கெதிரான வன்முறைகளை கண்டிக்கும் வகையில் ஒரு கறுப்பு வருடமாக அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

பாரிஸில் அமைந்துள்ள எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பே (ஆர். எஸ். எம்) இவ்வாறு அறிவித்துள்ளது. அத்துடன் யுத்தப் பிரதேசங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் அறிந்திருக்க வேண்டிய அறிவுரைகள், தற்பாதுகாப்பு அம்சங்கள் என்பன குறித்தும் வழிகாட்டி நூல் ஒன்றையும் மேற்படி அமைப்பு வெளியிட்டுள்ளது இந்த ஆண்டு ருவாண்டாவில் மட்டும் 37 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா கடற்படையால்

## 70 நாகபட்டின மீனவர்கள் இதுவரையில் பலி

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் சிறிலங்கா கடற்படையினரால் நாகபட்டினம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களில் மட்டும் இதுவரை எழுபது பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

நாகபட்டினம் பகுதியில் இருந்து அரைமணிநேரப் பயணம் செய்வதற்கிடையில் சிறிலங்கா கடற்படையினரை எதிர் கொள்ள நேரிடுகிறது. கடலில் தெளிவான எல்லைக் கோடுகள் இருப்பது சாத்தியமற்றது. விடுதலைப் புலிகளின் பாவனைக்கான எரிபொருட்கள், ரவைகள் மற்றும் பொருட்கள் தமிழக மீனவர்கள் மூலம் வழங்கப்படுவதாக சிறிலங்கா கடற்படை குற்றம் சாட்டுகிறது.

# பொதுசன பிரதிநிதித்துவமுடைய அமைப்புகள்

# தமிழீழ நிர்வாக சேவையில் பதிவு செய்யலாம்

தமிழீழ ஊரக மேம்பாட்டு பங்கேற்பு, தமிழீழ ஊரக மகளிர் மேம்பாட்டு பங்கேற்பு, சனசமூக நலனோம்பு மூலவள நிலையங்களினதும் ஏனைய பொது அமைப்புகளினதும் தமிழீழ நிர்வாக சேவையுடனான தொடர்பு முறையும் பதிவு செய்தல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பாக தமிழீழ நிர்வாக சேவை வெளியிட்டுள்ள வழிகாட்டல்.

**நோக்கம், குறிக்கோள், இலக்கு**

கடந்த 53 ஆண்டு காலத்தில் அபிவிருத்திச் சிந்தனையிலும்செயலிலும்செல்வாக்குச் செலுத்தி வந்திருக்கும் மரபு வழிவந்த முதன்மைக் கோட்பாட்டிற்கும் மாற்றுக் கோட்பாடு ஒன்றின் மூலம் பதிவீடு செய்வதற்கு இம்மக்கள் அமைப்புக்களை எமது கட்டமைப்பிற்குள் உள்வாங்குவதால் பங்குகொள் கிராம வளர்ச்சிக்கும், அபிவிருத்தி தலையீட்டை நிலைத்து நிற்க கூடியதாக மாற்ற உதவும் என்ற யோசனையை முன்வைக்கின்றது.

1940 களின் பிற்பட்ட காலங்களில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இலங்கை அரசுகள் தங்களுடைய கட்சிக் கொள்கைகள் கிராமிய மக்களைச் சென்றடைவதற்கும் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவதாகவும் (தந்திரோபாயமாக) கிராம முன்னேற்ற சங்கங்கள், மாதர் முன்னேற்றச் சங்கங்கள் (காலப்போக்கில் கிராம அபிவிருத்திச் சங்கமாக மாற்றம் பெற்றது) சனசமூக நிலையங்கள் என்று மக்கள் அமைப்புக்களை உருவாக்கி நலிந்த இப்பிரிவினரின் பங்கெடுப்புடன் தங்களுடைய ஆட்சி அதிகாரங்களை கைப்பற்றினரே தவிர அடிப்படைத் தேவைகளைத் தானும் கிடைக்கச் செய்யவில்லை. அதேவேளை இம்மக்கள் அமைப்புகளும் கிராமிய அபிவிருத்திக் கோட்பாட்டிலிருந்து தூண்டல் பெறற்ற தனியலகுகளாக நோக்கம் இலக்கு என்பவற்றிலிருந்து வழுவிச் சென்றதனை கடந்தகால அனுபவங்களும், பாடங்களும் தெரிவிக்கின்றன; இம்மாதிரியான அமைப்புகள் முக்கியமான அடிப்படைப் பிரச்சினைகளைப் புறக்கணித்து காலப்போக்கில் ஒப்பந்த சங்கங்களாக மாற்றி அரசினால் வழங்கப்பட்ட ஒப்பந்த வேலைகள் செய்வதற்கு முக்கியத்துவம் கொடுத்து, இதன் அடிப்படைக் கொள்கைகள், கோட்பாடுகளில் ஏற்பட்ட மாறுதல்கள் மக்கள் இதிலிருந்து விலகிச் செல்வதற்கு ஏதுவாயிற்று.

இம்மக்கள் அமைப்புகளே ஒழுங்கமைப்புச் செய்து வழிநடத்திச் செல்ல வேண்டியது அவசியமாகிறது. ஏனென்றால் இலங்கை ரீதியாகபார்ப்போமானால் 80 % மக்கள் 15000 கிராமங்களிலே வாழ்கின்றனர். ஏறக்குறைய தமிழீழத்தில் 3000-ம் கிராமங்களில் எமது தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற போது இவர்களுடைய சமூக அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்வதற்கும் மக்கள் அனைவரையும் அபிவிருத்தியில் பங்குகொள்ளல ஊக்கப்படுத்துவதற்கும் இவ்வமைப்புக்களை புனரமைப்பு செய்ய வேண்டிய அவசியம்ஏற்பட்டுள்ளது.

இம்மாற்றமானது கிராமிய அமைப்புகளை புத்தம் புதியதொரு அணுகுமுறைக்கு இட்டுச் செல்வதற்காக ஆயத்தங்களைச் செய்வதற்குத் தமிழீழ நிர்வாக சேவை நோக்காகக் கொண்டுள்ளது. அதன் எதிர்பார்ப்புகள் ஏற்கனவே இருந்த அவைகளை விட முற்றிலும் மாறுபட்டவையாகவே இருக்கும். எனவே அதன் நோக்கங்களையும், இலக்குகளையும் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியம்; தற்போதைய அரசியல், பொருளாதார சூழ்நிலைக்கு புதிய மாற்றுவழி ஒன்றுக்கான தேவையும் அதுவே.

''அனைவரது தேவைகளையும் நிறைவு செய்யப்போதிய அளவைத்துமே இங்குள்ளது. ஆனால் ஒவ்வொருவரது பேராசைக்குத் தேவையானது இல்லை'' என்ற கோட்பாடுகள் மக்கள் தற்சார்பு நிலையை வலியுறுத்தி இம்மக்கள் அமைப்புகளைக் கிராமிய மேம்பாட்டிற்கான நோக்கில் ஈர்த்தெடுக்க வேண்டியதாகின்றது. எந்த ஒரு மனிதனும் ஆக்க சக்தி உடையவராக இப்பூமியில் பிறக்கின்றான். ஆனால் அவனைச் சூழவுள்ள காரணிகளே அவனுடைய முன்னேற்றத்திற்கு சாதகமாகவும், பாதகமாகவும் அமைகின்றது. இதுபோன்றதே ஒரு சமூகத்தின் நிலையும். எனவே இந்த சமூக அமைப்புக்களைகிராமியமேம்பாட்டுக்கான நோக்கத்தில் ஈர்த்தெடுக்க வேண்டியதாய் உள்ளது. இப்புதிய அணுகுமுறையானது யதார்த்த நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு விவேகபூர்வமான அமைப்புகளூடாக பரவலாகக் காணப்படும் சமூக தேவைகளை இது பூர்த்தியாக்கும்போது கிராமிய வரலாற்றினையும், பண்பாட்டினையும் இவ் அமைப்புக்கள் விஞ்ஞான பூர்வமாக அணுகுகிறது.

தற்போதைய சூழ்நிலையில் அரசியல் சமூக பொருளாதார பிரச்சினைகளில் பிறிதொரு அம்சம் பால் சமத்துவப் பிரச்சினையாகும்- உண்மையிலேயே வறியபெண்கள் குறிப்பாக முறைசாராத் துறைக்கூடாக பொருண்மிய வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பினை நல்கி வந்தார்கள். என்பதற்கு பல சாட்சியங்கள் காணப்பட்டன. ஆனால் இவர்களுக்கான மேம்பாட்டு ஒழுங்கமைப்பு முறைகளும் உண்மையான சரியான வழிகாட்டல்களும் இங்கு நடைபெறவில்லை. அதாவது நிறுவன மயப்படுத்தப்படவில்லையென்றே சொல்லலாம். ஆகவே சிறந்த ஒழுங்கமைப்பினாலும் உள்ளூர் மூலவளங்களையும் அறிவினையும், மகளிரின் ஆக்கத் திறனையும் பயன்படுத்துவதன் மூலம் இந்நிலையம் வெற்றி கொள்ள முடியும். எனவே தான் நலிந்த பிரிவினரின் பங்கெடுப்புடன் நிலைத்து நிற்கக் கூடிய மேம்பாட்டினைத் தூண்டிவிடக் கூடிய சாத்தியப்பாட்டினையும் கடந்த காலப்போக்குகளைத் திசை திருப்புவதற்கான ஆற்றல்களையும் இந்த மக்கள் அமைப்புகள் எதிர்காலத்தில் கொண்டிருக்க வேண்டும்.

கடந்தகால கிராமிய அலகொன்றை பகுத்து ஆய்வுகளை மேற்கொண்டால் செல்வந்தர், நிலச்சுவாந்தர், வட்டிக்குப் பணம்கொடுப்போர், வியாபாரி, அதிகாரி முதல் நிலையாகவும் வறியோர்கள், ஆண்பெண் நிலமற்றோர் சாதி இளைஞர் மதம் என்ற பல்வினத்தன்மையாக கிராமிய சமூக கட்டமைப்பு அதாவது கிராமியத்தில் தனித்த பொருண்மிய அலகுகளாக இல்லை என்பதனையே இது எடுத்துக்காட்டியது; இதில் முதற் சொல்லியவர்களின் செல்வாக்கு கடந்தகால சமூக அமைப்புக்களில் வேரூன்றி நின்றது. குறிப்பிடத்தக்கது. இப் பல்வினத்தன்மை கொண்ட கிராமிய அமைப்பில் மேல் இருந்து கீழ் நோக்கிய திட்டமிடல் முறையினால் ஏற்படும் பாதிப்புகள் மேம்பாட்டைத் தடுத்து விடுகின்றது. எனவே கிராமிய மக்களை அவர்களது உள்ளங்களில் கூட்டுறவு மதிப்புகளையும், குழு நடவடிக்கைகளையும் ஜனநாயக சமூக பெறுமானங்களையும்உள்ளகமுயல்தலையும் தூண்டி விடுவதற்கு அர்ப்பணிப்பு மிக்க நபர் அல்லது மக்கள் அமைப்புகளை ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகின்றது.

மேலும் இவ்வமைப்புகள் ஜனநாயக பெறுமானங்கள் கூட்டுறவு விருப்பு, கூட்டு விருப்பு பொருண்மிய சமூக நிர்வாகம் பகிர்வு சமத்துவம், உள்ளூர் மட்டத் தூண்டுதல் சுயசார்பு ஆகியவற்றினை அடியொற்றிய பொருண்மிய அடித்தளத்தினையும், சுய நிர்வாக ஊக்கத்தையும் நோக்குகளையும் கொண்டிருக்கும் அதே வேளை இந்த நிறுவன அமைப்புகள் தற்போதைய அரசியல் அதிகாரத்திற்குட்பட்டதாகவே அமைவுறும் தன்மையை பெற்றிருக்கும். இந்த நிகழ்வுப் போக்கு உருவாகவும் நிலைத்து நிற்பதற்கும் தொடர்ச்சியான சுய மதிப்பீடும் உள்ளகத் திருத்தங்களும் அவசியம் இது நிர்வாக சேவையின் அனுசரணையுடன்செயல்படும் இவ்வமைப்புகளை வழி நடாத்தும் பங்கு கொள்ளும் அனைவரும் தங்களுக்கான அபிவிருத்தி முறன்மையைக் காண வேண்டும். அது எவ்வாறு என்பது பற்றி சுருக்கமாக இங்கு குறிப்பிடுவது மிகப் பொருத்தமானதாக அமையும்.

எப்போதும் மக்கள் தங்களை தாங்களே நம்பி வாழப் பழகிக் கொள்ள வேண்டும். தங்களில் தாங்களே நம்பி இருப்பதனையும் ஒருவருக்கொருவர் இணைந்து உழைப்பதன் மூலம் கிடைக்கப்படும் மூலவளங்களை மாற்று உபயோகமாக்கிதமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தங்களை தாங்களே ஒருங்கமைத்துக் கொள்வதன் மூலம் எதிர் கொள்ளும் எல்லாக் கஷ்டங்களையும், இடர்பாடுகளையும் வெற்றி கொள்ளலாம் அபிவிருத்திக்கு உள்ளூர் மூலவளங்களையும் மக்களது ஆக்க சக்திகளையும் திறன்களையும் கிடைக்கின்ற சிற்றளவு நிதியினையும் பயன்படுத்தி உற்பத்தி இலக்கை அடைய வேண்டும் ஒரு விடயத்தை தனிநபர் செய்வதை விட பலர் ஒன்றிணைந்து திட்டம் ஒன்றைச் செயற்படுத்தும் போது அனுபவம் வாய்ந்த விரிவானதுமான செயல் வெளிப்பாடாகின்றது இவ்வாறு மக்கள் ஒன்று சேர்ந்து உழைக்கும் போது உதவும் வெளியீட்டை சமமாக பகிர்ந்து கொள்ளவும் முடியும்

பொது நன்மைக்காக மக்கள் ஒன்று சேர்ந்து உழைக்கும் போது பங்கு கொண்ட அனைவரும் கடுமையாகஉழைக்க வேண்டும் பொது நன்மைக்காக ஒன்று சேர்ந்து உழைக்கும் போது நேர்மையாகவும் ஒருவருக்கொருவர் விசுவாசமாகவும் இன்சொல் பேசுபவராகவும் ஒவ்வொருவரும் கடுமையான கட்டுப்பாடுடையவர்களாகவும் இருக்க வேண்டும், மக்களிடையே கருத்து வேறுபாடு அல்லது வேற்றுமை இருப்பின் எல்லோரும்ஒன்றுசேர்ந்து கருத்துப்பரிமாறல் செய்து ஒன்றுமையையும் ஒருங்கிசைவையும்மீள நிலைநாட்டவேண்டும் ஒருவருக்கொருவர் உதவிசெய்ய தயாராக இருக்க வேண்டும். சமூகத்தில் ஒருவருக்கு துன்பம் வந்தால் எல்லோரும் விரைந்தோடி அவருக்குஉதவ வேண்டும். சமூகத்தின் அபிவிருத்திக்குத் தேவையானவற்றை சிறந்த அறிவாளிகளோடும் சிறந்த நற்தலைவர்களோடும் சேர்ந்து ஒழுங்கமைக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். அபிவிருத்தி அல்லது வருமானம் உருவாக்கும் செயற்பாடுகளில்ஒவ்வொருவரும் பங்கு பற்றி உற்பத்தி அதிகரிப்பையும் சுகமான வாழ்வு நிலையையும், கல்வி அதிகரிப்பையும் மேம்படுத்துவதோடு, எங்களது சமூக ஒழுங்கமைப்பையும் ஒருங்கமைப்பையும் பலப்படுத்த வேண்டும்.

இங்கு குறிப்பிடப்பட்ட நெறிமுறைகளுக்கமைவாக எதிர்கால சமூக அமைப்புகள் செயற்பட்டு மக்களுக்கு பணியாற்றுவதற்கான ஏற்பாடுகளின் முதற்கட்ட நடவடிக்கையாக இருகின்ற பொது அமைப்புகளை தமிழீழ நிர்வாக சேவையில் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தநடைமுறைகள் பின்வருமாறு:

**பதிவு செய்தல்:**

ஏற்கனவே அரசாங்க நிர்வாக திணைக்களங்களில் பதிவு செய்து கொண்ட பதிவு செய்து தற்போதும் இயங்கி வருகின்ற பொதுசனப் பிரதிநிதித்துவமுடைய அமைப்புக்களை பதிவு செய்தல் வேண்டும். ஆனால் கூட்டுறவுச் சங்கங்கள் சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கங்கள், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்கள், தவிர்ந்த சகல அமைப்புகளும் அதாவது பொதுச்சபை, நிர்வாக சபைகளை அமைத்து இயங்கி வருகின்ற கிராம அபிவிருத்திச்சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் சனசமூக நிலையங்கள், இந்து மன்றங்கள், கிறிஸ்தவ மன்றங்கள் (சகல பிரிவுகளும்) விளையாட்டுக் கழகங்கள் தொழில் சங்கங்கள், நலன்புரி நிலையங்கள், சமூக அபிவிருத்தியில் ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனங்கள் போன்றன தமிழீழ நிர்வாக சேவையில் உணவு, கூட்டுறவு சமூக சேவைகள், மறுசீரமைப்பு பிரிவில் பதிவுசெய்துகொண்டு செயலாற்றலாம். இவ்வமைப்புகளில் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆகிய மூன்று ஊரக மட்டத்திலுள்ளவற்றிற்கு மாத்திரம் தமிழீழ நிர்வாக சேவையின் சட்டதிட்டங்கள் (யாப்புவிதி) வழங்கப்படும் அதே வேளை இவ்வமைப்புகளின் முன் சொல்லிய மூன்று அமைப்புகளின் பெயர்கள் வருங்காலத்தில் முறையே ''தமிழீழ ஊரக சமூக மேம்பாட்டு பங்கேற்பு அவைகள்'' என்றும் தமிழீழ ஊரக மகளிர் மேம்பாட்டு பங்கேற்பு அவைகள் என்றும்'' சனசமூக நலனோம்புமூலவள நிலையங்கள்'' என்றும் பெயர் கொண்டு அழைக்கப்படும் விளையாட்டுக் கழகங்கள் ஏனைய அமைப்புகளுக்கும்தூய தமிழ் பெயர்களை அவ்வப் பொது அமைப்புகளின் பொதுச் சபையின் அங்கீகாரத்தின் பின் தமிழீழ நிர்வாக சேவையின் அனுமதியுடன் பெயர் சூட்டிக் கொள்ளலாம். இச் சட்ட திட்டங்களுக்கேற்பவே எதிர்காலத்தில் இவ் வமைப்புகள் செயற்படும் ஏனைய அமைப்புகள் ஒவ்வொன்றும் தங்களால் தயாரிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு (யாப்பிற்கு) அமைவாக செயலாற்றும். எனினும் சட்டதிட்டங்கள் பற்றி தமிழீழ நிர்வாக சேவைக்கு தெரிவித்து முன் அனுமதி பெற்றே செயற்படல் வேண்டும். இந்த நடைமுறை தமிழீழ நிர்வாக சேவையில் பதிவு செய்வதோடு நடைமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

★ ஏற்கனவே வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்திகளின் பிரகாரம் முடிவு திகதி 10-10-1994ம் திகதியுடன் முடிவடைந்துள்ள போதும் பெருமளவான சங்கங்கள், பதிவு செய்யவில்லை என தெரியவருவதினால் மீண்டும் 25-10-94ம் திகதியிலிருந்து பதிவு செய்ய முடியும், என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

★ பதிவு செய்யும் நோக்கத்துடன் எத்தகைய அமைப்புகளையும் தமிழீழ நிர்வாக சேவையினால் வழங்கும் படிவங்களைப் பெற்று அப்படிவத்திலேயே பூரணப்படுத்தி பதவிற்கான விண்ணப்பங்களை நேர்முகமாகவே கையளிக்கப்பட வேண்டும்;

★ படிவத்தில் காணப்படும் தகவல்கள் தரவுகள் நன்கு பரிசீலனை செய்து குறித்த அமைப்பின் கடந்தகாலச் செயற்பாடு, மக்களின் ஈடுபாடு ஊரக சூழல் தேவைகள் ஆகியவற்றை முதன்மைப்படுத்தும் வகையில் பதிவுகள் அனுமதிக்கப்படும்.

★ பதவிக்கான முழுமையான தரவுகள்தகவல்கள் இல்லாது இருக்கும்போது ஊரக மட்டத்தில் காணப்படும் குடும்பங்களில் ஒவ்வொருவர் என்ற அடிப்படையில் 51% எண்ணிக்கையிலும் அதிகமானோரின் விருப்பு இருக்குமாயின் குறிப்பிட்ட நிறுவனம் பதிவு செய்ய அனுமதிக்கப்படும்.

★ படிவங்களைப் பூரணப்படுத்தியதும் உறுதிப்படுத்தலுக்காக ஒதுக்கப்பட்ட கூடுகளில் உறுதி செய்பவர்களிடமிருந்து கையொப்பம் பெற்று, தமிழீழ நிர்வாக சேவைப் பதிவகத்தில் ஒப்படைக்க வேண்டும்

★ அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட அவைகள், சங்கங்கள், கழகங்கள் நிலையங்கள் அனைத்திற்கும் பதிவிற்கான சான்றிதழ் 1994 மார்கழி மாதம்] 15ம் திகதிக்கு முன்பாக கோட்ட மட்டத்தில் தலைவர் செயலாளரை அழைத்து வழங்கப்படும்;

★ பதிவுச் சான்றிதழ் பெற்ற அமைவளங்கள் முதலாவது வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தை தை மாதம் 1995/01/01 தொடக்கம் பங்குனி மாதம் 1995-03-31 ம் திகதிக்கு முன்பாக கூட்டியாக வேண்டும்.

★ தமிழீழ நிர்வாக சேவையின் சட்டதிட்டங்களைதழுவி நடைமுறைப்படுத்தும் அவைகள் மட்டும் பொதுச்சபைக் கூட்டம் விடுதலைப் புலிகளின் ஊரக/வட்ட/கோட்ட மட்டத்திலுள்ள அரசியற்துறைப் பொறுப்பாளர்களில் ஒருவர் அல்லது தமிழீழ நிர்வாக சேவையினால் குறித்துரைக்கப்படும் அலுவலரினது முன்னிலையில் நடைபெறும்.

★ மேலும் குறித்த நிர்வாக எல்லைப் பரப்பினுள் கடமையாற்றும் குறித்த பொது அமைப்புகள் தொடர்பான அரச அலுவலர்களுக்கும் அழைப்பு விடலாம் அல்லது அவர்களே சமூகம் கொடுக்கலாம்.

★ தமிழீழ ஊரக மேம்பாட்டு பங்கேற்பு அவைகள், தமிழீழ ஊரக மகளிர் மேம்பாட்டு பங்கேற்பு அவைகள், சனசமூக நலனோம்பு மூலவள நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் தவிர்ந்த ஏனைய அமைப்புகள் தாங்களாகவே பொதுச் சபையைக் கூட்டி உத்தியோகத்தர் தெரிவுகளை மேற்கொள்ளலாம்- ஏற்கனவே சட்ட திட்டங்கள் இருக்குமாயின் தமிழீழ நிர்வாக சேவைக்கு தெரியப்படுத்தி அனுமதி பெறல் வேண்டும்- இல்லையாயின் சட்டதிட்டங்களைத் தயாரித்து முன் அனுமதிக்காக வழங்கப்படுதல் வேண்டும்-

★ பதிவுச் சான்றிதழ் பெற்றுக் கொண்ட அமைப்புகள் அந்தந்த நிறுவன சட்ட திட்டங்களுக்கேற்ப முகாமை செய்து கொள்வதுடன் மாதமொருமுறையேனும் செயற்குழுக் கூட்டத்தை கூட்டி, அதன் அறிக்கையையும் கணக்கு அறிக்கையையும் தமிழீழநிர்வாகசேவைக்குஅனுப்பி வைக்க வேண்டும்-

★ பொதுச்சபைக் கூட்டம் மூன்று மாதத்திற்கு ஒருமுறையேனும் கூட்டப்பட்டு அதன் அறிக்கையும் பொதுச்சபை அங்கீகரிக்கப்பட்ட கணக்கறிக்கையும் தமிழீழ நிர்வாக சேவைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்-

★ வருட முடிவில் தமிழீழ நிர்வாக சேவையினால் அங்கீகரிக்கப்பட்ட எண்பார்வைக் கழகங்களில் எண்பார்வை செய்யப்பட்ட அறிக்கை பொதுச்சபையினால். அங்கீகரிக்கப்பட்ட பின் தமிழீழ நிர்வாக சேவைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

★ சனசமூக நலனோம்பு மூலவள நிலையங்களுக்கான முழுமையான நடைமுறைகள் பற்றி தனியான பத்திரிகை வெளியீடு ஒன்று வெளியிடப்படவிருக்கின்றது-

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:-
16-7-1948

மறைவு:-
11-11-1991

திதி: 07-11-1994

**நாகலிங்கம் சிவகுருநாதன்**

வாழ்க்கை எனும் வானமதில்
முழுமதி என ஒளி தந்தீர்கள்
கண்ணீரைக் காணாது
எமை அணைத்துக் கொண்டீர்கள்
பண்புடனே பப்பா என அழைத்து
நாம் மகிழ்ந்தோமே
மம்மியுடன் மழலைகள்
எமையும் மறந்து
எங்கு சென்றீர்கள் பப்பா

மனைவி, பிள்ளைகள்

16, நெடுங்குளம் றோட்
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(9996)

## நாட்டுக்கு உயிரீந்த ...
## நாலாமாண்டு நினைவலை



அரும்பாய்
19-11-1973

விதையாய்
07-11-1990

**வீரவேங்கை மது**
**(வடிவேலு ஆனந்தசிவம்)**

அன்னைத் தமிழ் காத்து
அன்னியரை ஓடவைத்து
மின்னற் தமிழ் வாழ
மிக்கபல களங்கண்டு
தச்சன் காட்டு முகாம்
தகர்த்தெறிந்த சமரதிலே
உன்னை அர்ப்பணித்தாய்
உவகையுடன் சென்றிட்டாய்!
நான்காம் ஆண்டின்
நல்லஞ் சலியிந்து
ஊன் உருக உனைவழுத்தி
உயர்வு சொன்னோம் அமைதி கொள்க!

மீசாலை வடக்கு,
மீசாலை.
07-11-1994

(9988)

பெற்றார்
உடன்பிறப்புக்கள்

## பிறந்தநாள் நினைவலைகள்



மலர்வு:-
07-11-1972

உதிர்வு:-
17-12-1991

**தர்சினி சர்வானந்தா**

(யாழ்/வேம்படி மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி)

பிறந்த நாளில் பேருவகை கொண்டதும் - கல்வியில்
சிறந்த நாளில் களிப்பு எய்தியதும் - பெரியவளாய்
மலர்ந்த நாளில் மகிழ்ச்சி உற்றதுவும்-ஒருகண மேனும்
மறந்து தான் போகுமோ? நினைவில் மறையுமோ?

கண்ணிலே பூத்த மலரெடுத்து
கண்மணியே! அர்ச்சிக்கின்றோம்
விண்ணுக்கு விரைந்த போதும் - உம்நினைவு
எண்ணத்தில் என்றும் மறையாது - மறவாது!

DR. ந. சர்வானந்தா,
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்

நெஞ்சில் நிறைந்த
அப்பா, அம்மா,
தம்பி

(9837)

சிந்தனைக்கு

அரசியல்வாதி ஆண்டவனையே தட்டிக்கழித்துவிட வல்லன். - வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 07-11-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

# இனவாத பிரசாரத்தில் புதிய பரிமாணம்

தென்னிலங்கைத் தேர்தல் களத்தில் இனவாதப் பிரசாரம் சூடுபறக்கின்றது. இப்பிரசாரத்தில் சிறிய கட்சி, பெரியகட்சி, இனவாதக்கட்சி, தேசியக்கட்சி எனக் கூறிக்கொள்ளும் கட்சி என்ற பேதமில்லாமல் இனவாதம் தாராளமாகக் கக்கப்படுகிறது.

'சிங்கள மகா சம்பத பூமிபுத்ர' கட்சியின் வேட்பாளரான ஹரிச்சந்திர விஜேதுங்க இனவாதம் பேசுவதும் கூக்குரல் இடுவதும் பெரியதொன்றல்ல. ஏனெனில் அவரின் கட்சியின் பெயரே அது முற்றுமுழுதான இனவாதக்கட்சி என்பதைப் பறைசாற்றுவதற்குப் போதுமானதாகும்; இதேவேளை சுயேட்சை வேட்பாளரான முன்னாள் பா. உ. ஹட்சன்சமரசிங்க இனவாதம் பேசுவதும் முக்கியமானதல்ல. ஏனெனில் தனிப்பட்ட ரீதியில் தேர்தலில் குதித்துள்ள அவரின் கொள்கையும் அவருடனேயே செத்து மடிந்துவிடும்.

ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி இனவாதத்தை வெளிப்படையாகப் பேசுவது அந்த வகையில் எடுத்துக்கொள்ளக் கூடியதல்ல. ஐ.தே. கட்சியின் கடந்தகால வரலாறு இனவாதத்தை வளர்க்க அது எத்துணை தூரம் முனைப்பாகச்செயற்பட்டது என்பது பலர் அறிந்த விடயமாகிலும், ஐ.தே.கட்சி இனவாதத்தையே தனது முற்று முழுதான மூலதனமாக்குவதும் அதை வெளிப்படையாக காட்ட முற்படுவதும் சிறிலங்கா அரசியல் வரலாற்றில் முக்கியமானதொரு அம்சம் தான்.

ஐ.தே கட்சியில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவே தன்னை சிங்கள மக்களின் தலைவனாகக் காட்டிக் கொள்ள முற்பட்டவர்களில் முதன்மையானவரென்றால், தற்போதைய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவே வெளிப்படையாக பௌத்த - சிங்கள பேரினவாதத்திற்குத் தலைமை தாங்க முற்பட்டவர் எனலாம் இந்தவகையில் ஐ.தே.க. தன்னை வெளிப்படையாக ஒரு பேரினவாதக் கட்சியாக டி.பி. விஜேதுங்கா காலத்திலேயே பிரகடனப்படுத்தியதெனலாம்.

இந்நிலையானது தற்பொழுது ஜனாதிபதித் தேர்தலிலும் தொடர்கின்றது ஐ.தே.க ஜனாதிபதி வேட்பாளரான சிறிமா திசாநாயக்கா தாராளமாகவே இனவாதம் பேசுவதற்குத் தயாராகவுள்ளார். பேசியும் வருகின்றார். இதன் மூலம் இனவாதிகளின் ஆதரவையும் இராணுவத்தினரின் ஆதரவையும் அவர் பெற்றுக்கொள்ள முற்படுகின்றார்.

இருப்பினும் இம்முறை இவ் இனவாதப் பிரசாரத்தில் வேறு ஒரு பரிமாணமும் உண்டு. கடந்த காலத்தில் சிறிலங்காவின் அரசியற் கட்சிகள் இனவாதத்தை கிளற முற்பட்ட வேளையில் போட்டி போட்டுக் கொண்டு முற்பட்டன. எதிர்க்கட்சியினர் சிறுபான்மையினருக்கு எதிராகச் சட்டம் கொண்டு வருவோம் என்றால், ஆளுங்கட்சி அதைவிடவும் மேலான சட்டம் கொண்டுவந்துவிட்டோம் என்றே பறைசாற்றியது.

ஆனால் இன்றைய பிரசாரங்களில் அவ்வாறு இனவாதத்தைத் தூண்டுவதில் பிரதான கட்சிகள் போட்டியிடவில்லை என்பது ஒரு வகையில் முன்னேற்றகரமான அம்சம் தான். அதாவது ஒருபுறம் இனவாதத்தை தூண்டும் கட்சிகளும், மறுபுறம் கடந்த காலம் கடைப்பிடிக்கப்பட்ட இனவாதக் கொள்கையே நாட்டை இன்றைய நிலைக்குக் கொண்டு வந்தது என்ற ரீதியில் தர்க்கிக்க முற்படும் நிலையில் மற்றைய கட்சிகளுமே உள்ளன.

இந்த வகையில் இம்முறை இனவாதப் பிரசாரத்தின் பாணியே மாற்றம் கண்டுள்ளதெனலாம். சிங்கள மகா சம்பந்த பூமி புத்ர கட்சியின் வேட்பாளர் ஹரிசந்திர விஜேதுங்கா 'பொது மக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளரான பிரதமர் சந்திரிகா தமிழருக்காகவே செயலாற்றி வரும் தமிழர்; பொட்டு அணியாதது ஒன்று தான் அவருக்குள்ள குறைபாடு' எனச்சாடியுள்ளமை இனவாதப் பிரசாரத்தின் தொனி மாறியுள்ளதை வெளிக்காட்டுவதற்கு சிறப்பானதொரு எடுத்துக்காட்டாகும். இதை ஒத்ததாகவே பிரதமர் சந்திரிகாவின் நெற்றியில் பொட்டிட்ட படம் தென்னிலங்கையில் ஒட்டப்பட்டதைக் குறிப்பிடலாம்.

இதேபோன்றே ஐக்கிய தேசியக்கட்சியும் தனது இனவாதப் பிரசாரத்தை தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக மட்டுமல்ல இனப்பிரச்சினை குறித்து சந்திரிகா அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கை தொடர்பாகவும் சாடி வருகின்றது. சந்திரிகா அரசாங்கத்தின் சமாதான முயற்சி என்பது தமிழருக்கு நாட்டைப் பிரித்து ஒப்படைப்பதற்குச் சமம் என்ற ரீதியிலும் சந்திரிகா அரசாங்கம் அதனைக் கனகச்சிதமாக நிறைவேற்றி வருகின்றது என்ற ரீதியிலும், இனவாதச் சாடலை நடத்தி வருகின்றது.

இந்தவகையில் கடந்த காலத்தைப் போன்று இனவாத பிரசாரமானது ஒரு போட்டிப் பிரசாரமாக மாறாது ஒரு பக்கப் பிரசாரமாக மாறியுள்ளமை ஒரு மாற்றம்தான் ஆனால் இதன் முன்னேற்றம் என்பது ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கா வெற்றி பெறுவாரா என்பதைப் பொறுத்தும் அதன் பின்னர் அவர் இனப்பிரச்சினை தொடர்பாகக் கடைப்பிடிக்கும் கொள்கையைப் பொறுத்துமே தீர்மானிக்கப்படும்/மதிப்பிடப்படும்.

---

# தொடரும் கடும் மழையினால் குடாநாட்டில் தொற்று அபாயம்

## குழந்தைகளுக்கு வயிற்றோட்ட நோய் பரவல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கொடிய தொற்று நோய்களின் பெருக்கம் அதிகரித்துள்ளது. சமீப நாட்களாகப் பெய்து வரும் அடைமழை காரணமாக குடியிருப்புப் பகுதிகளில் நீர்த்தேக்கம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக வாழ்விடங்களில் தொற்று நோய்கள் தீவிரமாகப் பரவ ஆரம்பித்துள்ளன.

சமீபநாட்களில் யாழ் மாவட்டத்தில் வயிற்றோட்டம், மலேரியா, நெருப்புக் காய்ச்சல், தடிமன் ஆகிய தொற்று நோய்களின் பரவல் அதிகரித்துள்ளது.

குறிப்பாகக் குழந்தைகள் நூற்றுக்கணக்கில் இந்தக் கொடிய நோய்களினால் பாதிப்படைந்து யாழ் மாவட்ட அரச - தனியார் வைத்திய சாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பெரியவர்கள் பலரும் இந்தநோய்களுக்குஉள்ளாகியுள்ளனர் என எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்நோய்க்கு கடுமையாகப் பாதிப்படைந்தவர்களில் சிலருக்கு மரணம் சம்பவித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையினால் அகதிமுகாம்கள் மற்றும் தாழ்நில குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது இங்கு கிணறு, மலசல கூட வசதிகள் அற்ற நிலை தொடர்கிறது.

சுத்தமான நீரில்லை மலசலங்கள் கிணற்று நீருடன் கலபடும் தன்மையும் ஏற்பட்டுள்ளது. இதனாலும் நுளம்பு போன்ற நோய்க் காவிகளின் பெருக்கத்தினாலும் இந்த அபாய நோய்கள் மக்கள் மத்தியில் தீவிரமாகப் பெருகத் தொடங்கியுள்ளன.

வயிற்றோட்டம் போன்ற நோய்களிலிருந்து தப்பித்துக் கொள்ள சுட வைத்து ஆறிய நீரைப் பருக வேண்டும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். [தி].(பா)

---

## இணைப்பு சீரமைப்பு

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேசப் பகுதியின் வீதிகளில் உள்ள மின்சார இணைப்புக்களை சீரமைத்து செப்பனிடும் பணியில் பிரதேச சபையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மின் இணைப்புக் கம்பங்களுக்கு இடைஞ்சலாகவுள்ள மரங்களை வெட்டியும், சாலைகளில் அறுந்து தொங்கும் மின்கம்பிகளைப் பொருத்தி சீர் செய்தும், மேற்படி பணிகளை துரித கதியில் செய்து தருவதை அவதானிக்க முடிந்தது.(41)

## நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கப் பாவனையாளர்களுக்குரிய செப்ரெம்பர் மாத முதல் இரண்டு வாரங்களுக்கான நிவாரண உலர் உணவுப் பொருட்கள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் ஜும்மாபள்ளிவாசல் ஒழுங்கையில் உள்ள சங்க நிவாரணக்கிளைகளில் விநியோகிக்கப்படும் என அதன் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது

---

# இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வுகாண 65 சதவீதமானோர் ஆதரவு

## சண்டே ரைம்ஸ் பத்திரிகை கருத்து கணிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்படுவதை சிங்கள மக்களில் அநேகமானோர் விருப்புவதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்றில் இது தெரிய வந்துள்ளது.

இவ் விடயம் பற்றி வினவப்பட்டவர்களில் 65.09 சதவிதமானவர்கள் வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்படுவதை ஆதரித்தனர் 21 சத விதத்தினர் இராணுவத்தீர்வை ஆதரித்தனர்.

பேட்டி காணப்பட்டவர்களில் 89 சத வீதத்தினர் சிங்கள மக்களாவர் நான்கு சத வீதத்தினர் தமிழர்கள் ஐந்து சத வீதத்தினர் முஸ்லிம்கள்.

சமூகத்தின் பல்வேறு தரப்பினர் இக் கருத்துக் கணிப்பிற்காக தெரிவு செய்யப்பட்டனர் 1.6சதவீதத்தினர் சமூகத்தின்உயர்மட்டத்தினர் 40சதவீதத்தினர்நடுத்தரவர்க்கத்தினர்கடந்த மாதம் 20-ம் திகதிக்கும் 29 ஆம் திகதிக்கும் இடையில் இந்த கணிப்பீடு நடைபெற்றது.

---

# இந்திய அதிகாரிகளுடன் காமினி உத்தியோக பூர்வமாக பேசவில்லை

## திருமதி சிறிமா திசாநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

காலஞ் சென்ற தமது கணவர் காமினி திசாநாயக்கா இந்திய அதிகாரிகளுடனோ அல்லது தமிழ் பிரதிநிதிகளுடனோ எவ்வேளையிலும் உத்தியோகபூர்வமாக இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக பேச்சு நடத்தவில்லை என திருமதி சிறிமா திசாநாயக்கா தெரிவித்துள்ளார் செய்தியாளர் மாநாடு ஒன்றில்அவர் இத்தகவலை வெளியிட்டார்.

ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு வராவிட்டால் என்ன செய்வீர்கள்? என பத்திரிகையாளர்கள் அவரிடம் கேட்டபோது இதற்கு பதிலளித்த சிறிமாதிசாநாயக்கா இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனக் குறிப்பிட்டார் அவர் தொடர்ந்து கூறுகையில் இந்திய இராணுவம் வரவழைக்கப்படமாட்டாது எனவும் இராணுவத்தை அழைப்பது தொடர்பாக உடன்பாட்டில் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பாக காமினி திசாநாயக்காஇந்திய அதிகாரிகளுடன் ஏதாவது பேச்சு நடத்தினாரா எனக் கேட்கப்பட்டபோது உத்தியோகபூர்வ ரீதியில் இத்தகைய பேச்சுக்கள் எதிலும் அவர் பங்கு பெறவில்லை எனவும் குறிப்பிட்டார்.

---

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994. 11. 07

திங்கள் இரவு

08.01- தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08.20- காந்தரூபன் அறிவுச்சோலை முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்ச்சியின் தொகுப்பு
08,30- செய்திகள்
08.40- தரிசனம் ஓவியக் கலைஞர் திரு இராசையா அவர்களுடனான செவ்வி
09.00- மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

1994. 11. 08

செவ்வாய் காலை

07.02- மாவீரவணக்கம்
07.15- இன்றையநாரகை
07.30- செய்திகள்
07.35- பத்திரிகைச் செய்திகள்
07.40- தாயகப் பாடல்கள்
08-00- மணிக்கு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

---

# அண்ணாவை தரக்குறைவாக நான் எண்ணியதில்லை

## இந்திய தேர்தல் ஆணையாளர் சேஷன்

(சென்னை)

தமிழக முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா பற்றி கூறிய தவறான கருத்துக்காக சேஷன் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற முதலமைச்சர் ஜெயலலிதாவின் கோரிக்கை தொடர்பாக கருத்துக்கூற சேஷன் மறுத்துவிட்டார்.

தலைமை தேர்தல் ஆணையாளர் சேஷனின் வாழ்க்கை வரலாற்றை கோவிந்தன் குட்டி என்பவர் 'சேஷன் ஒரு உள்ளார்ந்த கதை' என்ற பெயரில் புத்தகமாக எழுதியுள்ளார். இதில் சேஷன் கூறிய கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. தமிழகமுன்னாள் முதல்வர் அண்ணாதுரை சி.ஐ.ஏ. ஏஜென்ட் என்ற கருத்தும் அந்நூலில் இடம்பெற்றுள்ளதால் அந்நூல் பெரும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.

தமிழ்நாட்டில் நடந்தஇந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு அடிப்படைக் காரணம் அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ.தான் இதன் தூண்டுதலின்படி அண்ணா செயல்பட்டார் என சேஷன் அண்ணாதுரை பற்றி கூறியுள்ளார். இக்கருத்திற்கு தமிழகத்தில் உள்ள அனைத்து திராவிடக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. திமுக, மதிமுக அதிமுக என்பன போராட்டத்தில் குதித்தன; சேஷனின் இப்புத்தகம் வெளியிடப்படுவதற்கு சென்னை உயர் நீதிமன்றில் தமிழக அரசு இடைக்காலத் தடை வாங்கியது.

இந்நிலையில் அண்ணா பெரும் தலைவர் அவர் மீது எனக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு அவரைப் பற்றி தவறான கருத்து ஏதும் கூறவில்லை. பத்திரிகைகள் அண்ணா பற்றிய எனது கருத்தை தவறாக வெளியிட்டு தமிழக மக்களிடையே கோபத்தை ஏற்படுத்திவிட்டன- என சேஷன் கூறினார்.

அண்மையில் பங்களூரில் செய்தியாளர்கள் சேஷனிடம் அவர் மன்னிப்புக் கூற வேண்டும் என ஜெயலலிதா கூறியிருப்பது குறித்து கேட்டபோது சொல்வதற்கு ஒன்றுமில்லை என்று மட்டும் அவர் கூறினார்

இந்நூல் தொடர்பாக சேஷன் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் சமீபத்தில் சென்னையில் ரோட்டரி கிளப்பில் நான் பேசியபோது கூட அண்ணாவின் அறிவையும் கண்ணியத்தையும் யேல்பல்கலைக் கழகம் கொடுத்த மரியாதையையும் குறிப்பிட்டு அவரைப் போன்ற உத்தமர்கள் நாட்டுக்குத்தேவை என்று குறிப்பிட்டேன் அப்படிப்பட்ட அண்ணாவை தரக்குறைவாக எப்போதும் எண்ணமாட்டேன் என அவர்குறிப்பிட்டுள்ளார்.

---

## குடியிருப்பில் தனிவீடுகள் விரைந்து அமைப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை சாம்சன்குடியிருப்பில் தனித்தனிவீடுகள் அமைக்கும் வேலைகள் தற்போது மிக வேகமாக நடந்தேறி வருகின்றன குடியிருப்பில் இருந்த கொட்டகைகள் அகற்றப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனியாக வீடுகள் அமைக்கப்படுவது சில மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது

ஆரம்பத்திலே மந்தகதியில்நடந்தஇவ்வீடமைப்பு வேலைகள் தற்போது பெய்து வரும்பருவ மழையைத் தொடர்ந்தே வேகம் பெற்றுள்ளன சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் இக் குடியிருப்பில் மக்கள் கடந்த காலங்களில் மழையினால் பெரும்அவலங்களை சந்தித்து வந்தமை குறிப்பிடத்தக்கது; (22)

## இலவச பற்சிகிச்சை

(தொல்புரம்)

வடமாகாண புற்றுநோய் தடுப்புச் சங்கத்தினர் பற்சிகிச்சைப் பரிசோதனையை இலவசமாக மேற்கொண்டு வருகின்றனர்

வாய்ப் புற்றுநோய்க்கு முக்கிய காரணமாக தென்படும் பல்வியாதியினையும் பற்சுகாதாரத்தின் அவசியத்தையும் மக்களிடத்தில் தெளிவுபடுத்தி இந்நோயினால் பாதிக்கப்படும் நோயாளர்களை பரிசோதனை செய்தும் வருகின்றனர்.

மேற்படி சங்கப் பணிமனையில் வியாழன் ஞாயிறு தினங்களில் இலவச பற்சிகிச்சைப் பரிசோதனை நடைபெற்று வருவதால் பல மக்கள் இந்த மருத்துவ பரிசோதனையை பெற்று பயனடைந்து வருவதாகவும் தெரியவருகின்றது [41]

---

# சம்பிரதாய ஜனாதிபதியாக சிறிமாவோ நியமனமாவார்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க வெற்றிபெற்றால் அடுத்த ஆண்டு ஜூலை மாதளவில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படும்போது சம்பிரதாய பூர்வ ஜனாதிபதி பதவிக்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நியமிக்கப்படலாம் என அரசியல் விமர்சகரான கொழும்பு பல்கலைக் கழக விரிவுரையாளர் பாக்கிய ஜோதிசரவணமுத்து தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் உலகில் முதல் பெண் பிரதமர் என்ற பெயரைப் பெற்ற சிறிமாவோ பண்டாரநாயக்கா நாட்டின் இரண்டாவது பெண் ஜனாதிபதி என்ற பெருமையையும் பெறுவார் என அவர் குறிப்பிட்டார்;

---

# சிங்கள இனமும் மொழியுமே இலங்கையில் தொன்மையானது

சிங்கள இனமும் மொழியும் மட்டுமே இந்நாட்டின் தொன்மை மிக்கவை என பூமிபுத்ர கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டாக்டர் ஹரிசந்திர விஜேதுங்கா வானொலியில் ஆற்றிய பிரசார உரை ஒன்றில் குறிப்பிட்டார்.

சிங்களேய என்பது இலங்கையின் பூகோள ரீதியான பெயராகும்- சிங்கள மொழி எலு எனும் மொழியிலிருந்து உருவானது தமிழ்மொழியுடன் அதற்கு எந்தத் தொடர்பும் இல்லை- வெளிநாட்டவர்கள் இலங்கைக்குள் வரமுன்னதாகவே இங்கு வாழ்ந்த மக்கள் குறித்து மஹாவம்சம் கூறுகின்றது என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்;

# பிரதமர் சந்திரிகாவிற்கு லஞ்சம் வழங்கமுயன்றோர் மீது நடவடிக்கை

(கொழும்பு)

முன்னைய அரசாங்ககாலத்தில் செய்யப்பட்ட ஒப்பந்தமொன்று ரத்துச் செய்யப்படாமல் இருப்பதற்காக தமக்கு ஐம்பது லட்சம் ரூபாவை லஞ்சமாக தர தயாராக இருந்ததாகவும் இது போல மற்றுமொரு ஒப்பந்தத்தின் பேரில் ஐந்து கோடி ரூபாவை லஞ்சமாக தர முற்பட்டதாகவும் பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்த கூற்று தொடர்பாக லஞ்ச ஆணையாளர் பிணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளது

லஞ்ச ஆணையாளர் திரு மதிநெலும் கமகே மேலும் தகவல் தருகையில் இது தொடர்பாக பிரதமரின் முறைப்பாட்டை பெறுவதற்காக பிரதமர் அலுவலகத்திற்கு கடிதம் எழுதப்பட்டிருப்பதாக தெரிவித்தார் பிரதமரின் முறைப்பாடு கிடைக்கப்பெறாமல் இது விடயத்தில் மேலதிக நடவடிக்கை எடுக்க முடியாது எனவும் எனினும் பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் அளித்த தகவலின் அடிப்படையில் கோவை ஒன்று திறக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

# மலையக மக்கள் சந்திரிகாவிற்கு வாக்களிக்க தொண்டா கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதிதேர்தலில் மலையக மக்கள் சந்திரிகா குமாரதுங்கவிற்கே வாக்களிக்க வேண்டும் என அமைச்சர் தொண்டமான்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னதாக அமைச்சர் தொண்டமான் தாம் நடுநிலை வகிக்கப் போவதாகவும் மலையக மக்களும் தமது இ. தொ. காவும் தாம் விரும்பிய ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும் என்றும் அறிவித்திருந்தார். இவர் பின்னர் சந்திரிகா அரசில் சுற்றுலாத்துறை அமைச்சராக பதவி ஏற்ற பின் இப்புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் பதவி ஏற்றதும் தொண்டமான் இந்தியா புறப்பட்டுச் சென்றார். தற்போது இந்தியாவிலிருந்துகொண்டே மலையக மக்கள் சந்திரிகாவிற்கு ஆதரவாக ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கும்படி கோரியுள்ளார். அவர் இன்று திங்கள் நாடு திரும்புகிறார்.

தொண்டமானின் இவ்வறிவிப்பு பொ ஐ. முக்கு மலையகத்தில் கணிசமான வாக்குகளை பெற்றுக் கொடுக்கும் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

## ஆடை தொழிற்சாலைகள் மூடப்படமாட்டாது

### அமைச்சர் உறுதியளிப்பு

(கொழும்பு)

முன்னைய அரசினால்ஆரம்பிக்கப்பட்ட ஆடை தயாரிப்பு தொழிற்சாலைகள் மூடப்பட நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது எனகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி வி. குணரட்ண கூறியுள்ளார்

இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஆடைகளை ஏற்றுமதி செய்ய கோட்டாக்களை பெற்றுக்கொள்ள அமெரிக்க தூதுவருடன் பேச்சுகள் நடக்கின்றது. முன்னைய அரசு அரசியல் லாபம் பெறுவதற்காக ஆடை தயாரிப்பு தொழிற்சாலை திட்டத்தை ஆரம்பித்தது. கட்சி ஆதரவாளர்களுக்கும் நண்பர்களுக்கும் கோட்டாக்களை வழங்கும் இயதால் ஊழலும் விரயமும் காணப்பட்டது. இதனாலேயே இத்தொழிற்சாலைகள் சிறப்புற இயங்காமல் போயின என்றும் அவர் குறிப்பிட்டார்

## உதைபந்தாட்டம்

யாழ் மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று 15வயதுப் பிரிவு யாழ் இந்துவில் வேலாயுதம் ம. வி எதிர் புனித யோசப் வித்தியாலயம் சாவகச்சேரி இந்து எதிர் அருணோதயாவும் புங்குடுதீவு ம. வித்தியாலயம் எதிர் உடுப்பிட்டி அ. மி கல்லூரியும் விளையாடும்

யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் 17வயதுப் பிரிவு உடுப்பிட்டி அ. மி கல்லூரி எதிர் யாழ் இந்தவும் 19வயதுப் பிரிவு உடுப்பிட்டி அ,மி எதிர் நாவாந்துறை றோ. கவும் விளையாடும்

## கண்டெடுப்பு

பெண்கள் அணியும் நகை ஒன்று யாழ் மத்திய பஸ் நிலையத்திற்கு அருகில் சிற்றூர்தியின் காப்பாளரால் கண்டெடுக்கப்பட்டு பஸ்நிலைய காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் இவற்றை தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு சிற்றூர்தி சேவை சங்கங்களின் இணையம் கேட்டுள்ளது.

## மக்கள் வங்கிக்கு 18 பேர் நியமனம்

(வடமராட்சி)

யாழ், மக்கள் வங்கி அலுவலகத்திற்கு 18 லிகிதர்கள் நியமனம் பெற்றுள்ளனர். இம்மாதம் 15 ஆம் திகதி முதல் இவர்களுக்கு நியமனம் கிடைத்துள்ளது. இவர்களுக்கான நியமனப் பத்திரங்கள் யாழ். வந்து சேர்ந்தது

அண்மையில் நடைபெற்ற வங்கிக்கு ஆட்சேர்ப்பு லிகிதர் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர்களிலேயே இந் நியமனம் செய்யப்பட்டுள்ளது இவர்களில் பெண் உத்தியோகத்தர்களே அதிகம், (யோ)

## தேர்தல் கூட்டங்கள் களைகட்டவில்லை

[கொழும்பு]

பாலத்துறைக் குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா உட்படப் பலர் கொல்லப்பட்டதற்கு பின்னர் ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் மீண்டும் களைகட்டவில்லை. இவ்வாறு பி, பி. சியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி கூறியுள்ளார்

அவர் மேலும் கூறுகையில் தேர்தல் பிரசாரம் அதன் இறுதிக் கட்டத்தை அடைந்த போதும் பொதுக் கூட்டங்களில் மக்கள் பெருமளவில் கலந்து கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார்,

## குண்டுவெடிப்பில்

என கருதுபவர்கள் எவவே அவர்களே இதனைச் செய்ய முடியும் என சட்டத்தரணி என்ற முறையில் நான் நம்புகிறேன்

தற்போது இரகசியப் பொலிசார் மேற்கொண்டு வரும் விசாரணைகளின் மூலம் புலிகள் தான் இதனைச் செய்தார்களா? என்பது குறித்து இதுவரை அறிய முடியவில்லை அதேவேளை யார் செய்திருப்பார்கள் என்பது குறித்து சந்தேகமும் இல்லை

இந்திய விசாரணைக்குழுவினர் ராஜீவ் காந்தியின் கொலை விசாரணையுடன் தொடர்பு கொண்டவர்கள் அவர்களின் அனுபவத்தைப் பெறும் நோக்குடனேயே வரவழைக்கக் கோரினோம் அவர்களின் வருகை தாமதமாகத் தாமதமாக அவர்களின் வருகையினால் ஏற்படும் பலன் குறைவடையும் என மேலும் அவர் தெரிவித்தார்

## ஜனாதிபதி

தேசிய முன்னணியைச்சேர்ந்த பலரும் கூட இப் புதிய கட்சியுடன் இணையும் சாத்தியம் இருப்பதாகவும் கூறப்படுகிறது

## கேகாலை

உயிரிழந்தார். இச்சம்பவத்தில் பொலிஸ் வாகன சாரதி ஒருவரும், பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் காயமடைந்தனர். இச்சம்பவங்கள் தொடர்பாகநால்வர் கைதாகியுள்ளனர்-

## நேற்று

வேறு ஐ-தே-கவிற்கு நம்பிக்கை உரியவர்களுக்கும் விநியோகிக்கப்பட்டிருந்தது இவ் ஆயுதங்கள் தொடர்பான தெளிவான விபரங்கள் இன்மை காரணமாக அவற்றை புதிய அரசால் மீளப்பெற முடியாமல் போய்விட்டது-

இந்த நிலையிலேயே ஐ. தே-கவினர்பெரும் வன்முறையில் இறங்கலாம் எனவும் அதன் மூலம் இனவன்முறையைத் தோற்றுவிக்கலாம்என அரசாங்கத் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது-

இதைத் தொடர்ந்து பெரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது- சுமார் 35,000 பொலிசார் தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ள அதேவேளை ஏனைய ஆயுதப் படையினரும் உசார்ப்படுத்தப்பட்டுள்ளனர்

அடுத்ததாக கலவரங்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கைஎடுக்குமாறும்பொலிசாருக்கு அரசாங்கம் பணித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

## புலிகளின் நல்லெண்ணத்தை முன்னைய அரசுபயன்படுத்தவறியது

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விடுதலைப் புலிகளின் தரப்பில் முன்னரே பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் சில அற்ப காரணங்களுக்காக அவற்றை சரிவரப் பயன்படுத்த முன்னைய அரசாங்கம் தவறிவிட்டது என கிறிஸ்தவ ஒன்றியத் தலைவரும் ஆங்கில திருச்சபை முக்கியஸ்தருமான ரியான்சி பெரேரா தெரிவித்தார்-

நேற்றிரவு ரூபவாஹினியில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் இக்கருத்தைத் தெரிவித்தார்- அவர் தொடர்ந்து கூறுகையில் யுத்தம் தொடர்ந்து நடைபெற்றால் நாம் அனைவரும் எரிந்துவிடுவோம்- எனவே நாட்டின் நன்மையைக் கருத்திற் கொண்டு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க முன்வர வேண்டும் என்றார்-

இராணுவ நடவடிக்கை மூலம் இப் பிரச்சினையை என்றும் தீர்க்கமுடியாது- பத்தாண்டுக்கு மேற்பட்ட காலங்களில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் எதனைச் சாதித்தனர்? ஆனால் எவ்வளவு பாதுகாப்பான பகுதிகளில் கூட விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்- தற்கொலைப் படைத் தாக்குதல் இருக்கும்வரை பாதுகாப்பை பலப்படுத்துவதால் பிரயோசனம் எதுவும் இல்லை-

எனவே ஓர் அரசியல் ரீதியான தீர்வே அவசியமானது இது பல கட்டங்களில் நடைபெறும் சிலர் நினைப்பது போன்று இரண்டு மூன்று கட்டங்களுடன் இதனை முடிவுக்கு கொண்டுவர முடியாது இது சிக்கல்வாய்ந்த பிரச்சினை எனவே சிரமங்களை எதிர்நோக்கியே தீர்க்கப்பட வேண்டும், இரு தரப்பிலும் பல விட்டுக் கொடுப்புக்கள் நடைபெறவேண்டும்.

இரு தரப்பினரும் நட்பு ரீதியாக பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டும், இதன் மூலம் இரு தரப்புசந்தேகங்களும் நீக்கப்பட்டு ஒருவரை ஒருவர் முழுமையாக நம்பக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார்-

## புலிகளுடனான

ற்படுகிறது. இராணுவத் தீர்வொன்றின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என அக் கட்சியினர் நம்புகின்றனர் என அவ் ஆசிரியர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## புலிகளுடன்

எந்தவகையுமின்றி இருக்கின்றனர் தாக்கிவிட்டு தப்பி ஓடும் தந்திரோபாயத்தை மேற்கொள்ளும் விடுதலைப் புலிகளை மடக்க சிறிலங்காவின் யுத்த தந்திரோபாயத்திற்கு இயலாமல் இருக்கிறது விடுதலைப் புலிகளின் தற்கொலைப்பாணி தாக்குதலை முறியடிக்க முடியாது எனவும் தெரிவித்தார்

## கொழும்பில் கைதான தமிழ் டாக்டர் விடுவிப்பு

### பாலத்துறை குண்டுவெடிப்பு தொடர்பாக

(கொழும்பு)

பாலத்துறை குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இரகசியப் பொலிசாரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட தமிழ் டாக்டர் மறுநாளே விடுவிக்கப்பட்டார் என பொலிசார் கூறியுள்ளனர்

பொலிசார் மேலும் கூறுகையில், கொழும்பிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரி ஒன்றில் கடமையாற்றும் தமிழ் டாக்டர் குறித்து தமக்கு கிடைத்த தகவல் பொய்யானது எனவும் பொலிசார் கூறினர்.

## வங்கி பரீட்சை வினாத்தாள் ஹபரணவில் வந்தது

(வடமராட்சி)

யாழ் மாவட்டத்தில் நடைபெறவுள்ள இலங்கை வங்கிக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைக்கான வினாத்தாள்கள் 'ஹபரண' கப்பலில் வந்துள்ளது.

இம்மாதம் 12-ம் திகதி நடைபெறவுள்ள வங்கிப் பரீட்சைக்கான வினாத்தாள்களே வந்துள்ளன, கோமாரி கப்பலில் வந்த மா இறக்கப்பட்ட பின்னரே ஹபரணவில் இருந்து பொருள்கள் இறக்கப்பட இருப்பதால் பரீட்சை வினாத்தாள்கள் கோமாரி கப்பலுக்கு மாற்றப்பட்டுள்ளன.

## 10 மில்லியன் ரூபா பணம் வந்தது

யாழ்: மக்கள் வங்கிக்கு 10 மில்லியன் ரூபா பணம் நேற்று வந்து சேர்ந்தது. 'ஹபரண' கப்பலில் இக் குறித்த பணம் எடுத்து வரப்பட்டு மக்கள் வங்கிக்கு ஏற்றிச்சென்றனர். நூறு ரூபாவுக்குட்பட்ட குற்றித் தாள நாணயங்கள் எடுத்துவரப்பட்டன. (யோ)

## பாடசாலை

டைய வழமையான கடமைகளை எவ்வித தடங்கலின்றியும் செய்யலாம் என்பதனை தமிழீழ நிர்வாக சேவையினர் தெரிவித்துள்ளனர்.

## நாவாந்துறையில்

காயமடைந்தனர்- இதன் போது விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள இரு வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டது அவற்றிற்கு அருகில் உள்ள மூன்று வீடுகளிற்குள் புகுந்த ஒரு கோஷ்டியினர் வீட்டிற்குள் இருந்த பாவனைப்பொருள்களை உடைத்து சேதப்படுத்தியதோடு அவ்வீட்டில் இருந்த உடுப்புக்களையும் எரித்துள்ளனர்.

இவ் வேளை ஸ்தலத்திற்கு விரைந்த காவல்துறையினர் நிலைமையைஉடன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர் கலகத்தில் ஈடுபட்டவர்கள் பெருமளவினர் ஸ்தலத்தில் நின்ற காவல்துறையினரின் வேண்டுகோளை அடுத்து சரணடைந்தனர் மிகுதியானவர்களை காவல் துறையினர் தேடிக்கண்டு பிடித்து கைது செய்துள்ளனர் இதில் 8பெண்கள் உட்பட 45ற்கும் மேற்பட்டோர் அடங்குவர் இவர்கள் காவல் துறையினரால் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கலகம் நடைபெற்ற இடத்தில் நேற்று முழுநாளும் தமிழீழ காவல் துறையினரின் கண்காணிப்புப் பிரிவினர் காவல் புரிந்தனர்.

காயமடைந்த 20 பேரில் 9 பேர் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் ஏனையவர்கள் சிறிய காயங்களிற்கு இலக்கானினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் தவிர மற்றவர்கள் அனைவரும் நேற்று மாலை முன் வீடு திரும்பினர். (இ)

## பக்கம் பக்கமாக

மானோர் காயப்பட்டும், சிலர் மரணத்தைத் தழுவியும் உள்ளனர். எமது மக்களின் உயிர்களையும்உடைமைகளையும் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு எம்மைச் சார்ந்தது. இவ்வாறு எமது மக்களின் உயிர்கள் அநியாயமாக இழக்கப்படுவதை எம்மால் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. நாம் இவ் வீதி விபத்துக்களை தடுக்கும் பொருட்டு, கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். பத்திரிகை மூலமாகவும் வானொலி மூலமாகவும் பிரசாரங்களை மேற்கொண்டோம்.

இவற்றை முற்றாக தடுத்து நிறுத்தும் பொருட்டு பாடசாலைகள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் வீதி விபத்துக்கள் பற்றிய கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றோம். இருந்தாலும் அண்மைக்காலங்களில் வீதி விபத்துக்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன இவ் விபத்துக்களுக்கான காரணம் பற்றி ஆய்வுகள் மேற்கொண்ட பொழுது பின்வரும் காரணங்களைக் காணக் கூடியதாக உள்ளது.

ஃ தற்போதைய சூழ்நிலையில் துவிச்சக்கரவண்டிகளின் பாவனை அதிகமாகவுள்ளது.

ஃ இவ் வண்டிகளை செலுத்தும் செலுத்துனர்கள், வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் பற்றி நன்றாக அறிந்திருப்பதில்லை.

ஃ இதில் முக்கியமாக துவிச்சக்கரவண்டிகளில் பக்கம் பக்கமாகச் செல்வதும், கைகோர்த்தவண்ணம் கதைத்தபடி செல்வதும் குறிப்பிடத்தக்கதாகும். இதன் காரணமாக இவ்வாறான துவிச்சக்கரவண்டி செலுத்துனர்களினால் பாதையில் வரும் பாதசாரிகள் பற்றியோ அல்லது வாகனங்கள் பற்றியோ உணரமுடியாத நிலையில் உள்ளனர்

எனவே எமது மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு பக்கம் பக்கமாகச் செல்லும் துவிச்சக்கரவண்டிகள் செலுத்துனர் மீது எதிர்வரும் ஒன்பதாம் திகதி புதன் கிழமையிலிருந்து காவல் துறையினர் ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்பதை அறியத்தருகின்றேன்.

## எம்பிலிப்பிட்டிய மாணவர் கொலை

## 9 சந்தேக நபர்கள் மீது வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய பகுதியில் ஐதேக ஆட்சியில் 31 மாணவர்கள் காணாமற் போனமை தொடர்பாக ஒன்பது சந்தேக நபர்கள் மீது பதில் சட்டமா அதிபர் இரத்தினபுரி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்

இக் கொலையில் சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜராக்கும் படி மாவட்ட நீதிவான் புலனாய்வு துறையினருக்கு பணிப்புரைவிடுத்துள்ளார் மேலும் இச் சந்தேக நபர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களும் கூட சுமத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது இவ்வழக்கில் 96 பேர் சாட்சிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர் இவர்களில் 4பேர் பொலிஸ் அதிகாரிகள் ஆவர்


## தேவை

### கணக்காளர்

அனுபவம் வாய்ந்த கணக்காளர்கள் தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும்; கிளிநொச்சி மாவட்டத்தில் வியாபார, நிதி விடயங்களில் சேவையாற்ற வேண்டும் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

விளம்பர இல. 356
மே/பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்

(சி-10659)

யாழ் ஸ்ரீதர் அகலத்திரையில்
முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து வழங்கும்
பொ. தாசனின்
"இன்னும் ஒரு நாடு"
தினசரி பிற்பகல் 2-30, 4-00, 6-00
சனி, ஞாயிறு காலை 10-30, 4-30, 6-30
சனி, ஞாயிறு 2,30 மட்டும்
ஓகஸ்ட் '94 ஒளிவீச்சு காண்பிக்கப்படும்.

(சி-10655)


## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை கந்தையா

(கந்தமாதனம்)

(இளைப்பாறிய தலைமை ஆசிரியர், சித்திரபாஸ்கரன், சிற்பக்கலை, நாடகத்துறை ஆசிரியர்)

ஒட்டுவெளியை பிறப்பிடமாகக் கொண்டவரும் அன்னப்பிள்ளையின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற பொன்னையா, காசிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், திரு. திருமதி வீரகத்தி அவர்களின் மருமகனும், கனகமணி, கனகராசா, கனகபூபதி, கனகேந்திரன், கனகசோதி, கனகேஸ்வரன் (சவுதி அரேபியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், செ. சிவக்கொழுந்து (இளைப்பாறிய ஆசிரியர்), செ. மார்க்கண்டு (தலைவர் பளை ப. நோ. கூ. சங்கம்), செ. பாலசிங்கம் (டுபாய்), க. சரஸ்வதி, க. பொன்னம்பலம், க. பாலபூரணி, சி. ஜெயக்குமார் (தபால் ஊழியர் துனுக்காய்) ஆகியோரின் மாமனாரும், சிவஞானதேவி, சிவஞானராசா, சிவமலர் (ஆசிரியை பண்டிதர் குடியிருப்பு அ. த, க பாடசாலை), சிவரதி, சிவகுமாரி (ஆசிரியை - வேம்படுகேணி பாடசாலை), சிவலலிதா, சிவகலா, சிவகவிதா, சிவராசி, க. குமுதினி (ஆசிரியை நாகர் கோவில் அ. மி. த. க. பாடசாலை), அமுதினி, குணாளன், சத்தியசீலன், சற்குணசீலன், உத்தமரோகினி, மைதிலி, பிரதீபன், கோபிகா ஆகியோரின் அன்புப் பேரனாரும், துஷிகரனின் அன்புப்பாட்டனாரும், கா. பொன்னுத்துரை. நா. மகேஸ்வரி, காலஞ்சென்ற பொன்னம்பலம் ஆகியோரின் சிறியதந்தையுமான வே. கந்தையா 06- 11- 94 அன்று காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (07-11-94) பி. பகல் 2. 00 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
க. கனகேந்திரன்
(மகன்)

ஒட்டுவெளி,
மிருசுவில்

(10004)

### முருகேசு சின்னத்தங்கம்

பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உடுவிலை வசிப்பிடமாக கொண்டவருமாகிய முருகேசு சின்னத்தங்கம் அவர்கள் 6-11-94 அன்று காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும், சுப்பிரமணியம், ஜெகதீஸ்வரன், பரமநாதன், செல்வராசா, தவமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 7-11-94 திங்கட்கிழமை(இன்று)பிற்பகல் 2 மணியளவில் தகனம் செய்யப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
செல்வராசா
[மகன்]

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(10005)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது